
கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை
219
கார்த்திகை 2023
10.11.2023
ஆளுமைச் சிறப்பிதழ்

# ஜீவநதி

100/-
பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

## நெடுந்தீவு மகேஷ் சிறப்பிதழ்

வல்வை ந. அனந்தராஜ்
இ.சு.முரளிதரன்
கந்தர்மடம் அ. அஜந்தன்
வடகோவை வரதராஜன்
புலோலியூர் வேல் நந்தகுமார்
நெடுந்தீவு மகேஷ்
பரணீ



பொதுசன நூலகம்
02 MAR 2024
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2023 - காரத்திகை - ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**நெடுந்தீவு மகேஷ்**
**பல்துறை ஆளுமையாளர்**
வல்வை ந.அனந்தராஜ்...................... 03

**நெடுந்திவு மகேஷின்**
**"மனிதத்தைத் தேடி"**
இ.சு.முரளிதரன்.................................. 09


**விடைகாணாக் கேள்விகளோடு வாழும்**
**ஒரு சமூகத்தின் உணர்வுப் படிமங்களாய்**
**நெடுந்தீவு மகேசின் "வாழ்வதற்குப் போராடு"**
**சிறுகதைத் தொகுப்பு**
கந்தர்மடம் அ. அஜந்தன்.......................... 12

**என்றும் தொலையாதன் வாழ்வின்**
**வாழ்விடத்தின் பழகிய மனிதர்களின்**
**நினைவுகளைப் பேசும் நெடுந்தீவு மகேசின்**
**"தொலையா நினைவுகள்" குறித்த ஒரு பார்வை**
புலோலியூர் வேல் நந்தகுமார் ............... 30

**தாரணி ஓர் ஆச்சரியக்குறி**
**சிறுகதைத் தொகுப்பு ஓர் அறிமுகக்குறிப்பு**
சுந்தரம் டிவகலாலா............................. 32




**சிறுகதை**
நெடுந்தீவு மகேஷ் - 27



**கவிதை**
நெடுந்தீவு மகேஷ் - 29



**நேர்காணல்**
நெடுந்தீவு மகேஷ் - 16



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 கார்த்திகை இதழ் - 219**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## நெடுந்தீவுக்கு புகழ் சேர்க்கும் படைப்பாளர்

செல்லத்தம்பி மகேந்திரன் என்னும் இயற் பெயரை உடைய மகேந்திரன் அவர்கள் "நெடுந்தீவு மகேஷ்" என்னும் புனை பெயருடன் ஈழத்து இலக்கிய உலகில் வலம் வருபவர். உயர்ந்த தோற்றமும் எச்சமயமும் முகத்தில் புன்னகையும் வழிந்தோடும் அன்பான மனிதர் மகேஷ் அவர்கள். 1969 ஆம் ஆண்டு தினபதியில் இவரது முதற் சிறுகதையான "ஊமை" வெளியானது. ஆனால் இதற்கு முன்பாகவே 60 களின் ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையில் கவிதைகளை எழுதி வந்தார். இடது சாரிச்சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இவர் வர்க்கப்போராட்டம், சாதி ஒழிப்பு சார்ந்த கவிதைகளை ஆரம்ப காலத்தில் எழுதி வந்தார். செல்ல மகேந்திரன், வேதா மகேஷ், மாவுறையூரான் போன்ற புனை பெயர்களிலும் இவரது ஆக்கங்கள் வெளியாகி யுள்ளன. இவரது படைப்புகள் ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளியாகி உள்ளன. மனிதத்தை தேடி என்னும் கவிதைத் தொகுப்பையும் 3 சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ள இவர் விளக்கு சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். மேலும் அர்ச்சுனா, ஆறுதல் போன்ற இதழ்களிலும் ஆசிரியராக இருந்துள்ளார். உதயன் பத்திரிகையில் பணியாற்றி யுள்ளார். கல்விப்புலத்தில் நீண்ட காலமாக செயற்பட்டு வந்தவர். வடக்கு கிழக்கு கல்வித்திணைக்களத்தில் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றியவர். பல்வேறு ஆசிரிய பயிற்சிகளுக்கு வளவாளராகக் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். கல்விப்புலத்திலும், இலக்கியத்திலும் தொடர்ச்சி யாக செயற்பட்டு வரும் நெடுந்தீவு மகேஷ் அவர்களை கௌரவிக்கும் முகமாக இவ்விதழ் வெளியாகின்றது.

- க. பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வை.ந.அனந்தராஜ்

# நெடுந்தீவு மகேஷ் பல்துறை ஆளுமையாளன்



"கழிவுகள் கலையாகும்,கடதாசிகள் உருவங்களாகும்.கலைகள் மனிதர்களின் உள்ளத்தைச் செழுமைப் படுத்தும்"

என்பதற்கமைய கலை ஒரு கல்வி ஊடகம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் சிறுவர்களுக்கான ஆசிரியர்களாகக் கற்பித்தலில் ஈடுபடுபவர்களுக் கான சிறந்த கற்றல் சாதனங்களை ஆக்குவதற் கான வழிகாட்டல்களை எவ்வாறு நூல்வடிவில் கொண்டுவரலாம் என்பதைத் தனது "கலையாகும் கடதாசி" என்ற கலைநுணுக்கம் வாய்ந்த நூலின் ஊடாக முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களிடையே அறிமுகமாகி கல்வித் துறையில் நன்கு அறியப்பட்ட ஒருவர்தான் நெடுந்தீவு மகேசு. இவர் ஈழத்தின் தலைசிறந்த கவிஞரும், சிறுகதை எழுத்தாளராகவும் மட்டுமின்றி கலைத்திறன் நுணுக்கங்களை நன்கு அறிந்த ஒரு படைப்பாளியாகவும் இருப்பதால், கழிவுக்கடதாசி களில் இருந்து பிள்ளைகளைக் கவரும் வகை யிலான அழகிய உருவங்களையும், பறவைகள் மிருகங்களையும் உருவாக்கும் திறனைத்தனது நூலின் ஊடாகப் பகிரங்கப்படுத்தியிருந்த நெடுந்தீவு மகேசு அவர்களை "ஜீவநதி"யின் மூலம் அறிமுகப்படுத்து வதையிட்டு மகிழ்ச்சி அடை கின்றேன்.

ஏனெனில் அவரைப்பற்றி எழுதவேண்டிய ஒரு கடப்பாடும் எனக்கு உள்ளது. 2001ஆம் ஆண்டு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில், எனது "சந்நிதிச் செல்வம்" என்ற வரலாற்று நூலின் வெளியீட்டு விழா நடைபெற்ற பொழுது, வரவேற்புரையை நிகழ்த்துவதற்காகத் திருக்கோணமலையில் இருந்து கொழும்புக்கு வருகைதந்து மிகச் சிறப்பான முறையில் இலக்கியச்சுவையும்,நகைச்சுவையும் நிறைந்த வரவேற்புரையைப் பாடல்வடிவில் நிகழ்த்தியபொழுது அங்கிருந்த பலரும் பாராட்டி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நூல்வெளியீட்டுவிழாவில்
நெடுந்தீவு மகேசு அவர்கள் வரவேற்புப் பாடலை நிகழ்த்துகின்றார்

நெடுந்தீவு மகேசு என்ற புனைப் பெயரினூடாக நன்கு அறியப்பட்ட செல்லத்தம்பி மகேசு அவர்களைப் பற்றிய ஒருவிவரணச் சித்திரத்தை, "ஜீவநதி" இலக்கியச் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக எழுதி வழங்குமாறு, அதன் பிரதமஆசிரியர் திரு.கலாமணி பரணீ அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டபொழுது மகிழ்ச்சி யாக இருந்தது. எனக்கும் மகேசு அவர்களுக்கும் இடையிலான நீண்டநாள் நட்பின் சின்னமாக அவரைப்பற்றி எழுதும் வாய்ப்பைத் திரு.க.பரணி அவர்கள் வழங்கியிருந்தார்.

11ஆம் வட்டாரம்,நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மகேசு அவர்கள் திரு.தில்லையம்பலம் செல்லத்தம்பி மற்றும் திருமதி நாகமுத்து ஆகியோருக்கு 30.07.1943இல் மகனாகப் பிறந்து, தனது ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாட சாலையிலும், இடைநிலை மற்றும் உயர்நிலைக் கல்விகளை நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் கற்று ஆசிரியப் பயிற்சிக்காக கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்து, ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்று தெரணியகலை மலிபொடை டபார் வித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்து, அதனைத் தொடர்ந்து நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்,நெடுந்தீவு மகா வித்தியாலயம்,யாழ்ப்பாணம் நல்லூர் சி.சீ.தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றி, நெடுந்தீவு மாவிலித்துறை றோ.க.த.க. பாடசாலையின் அதிபராகவும் சில வருடங்கள் சேவையாற்றியதால், பாடசாலை நிர் வாகத் துறையிலும் அனுபவங்களைப் பெற்றிருந் தார். அதனைத் தொடர்ந்து சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்ற திரு.மகேசு அவர்கள் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு, ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணக் கல்வித் திணைக் களத்திலும் சேவையாற்றி போர் உக்கிரமடைந் திருந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்குக் குடும்பத்தினருடன் இடம் பெயர்ந்து வவுனியா கல்வித் திணைக்களத்தில் ஆரம்பப்பிரிவு சேவைக்கால ஆசிரியஆலோசகராக நியமிக்கப்பட்டு அங்கு கடமையாற்றிய காலத் திலேயே, அதிகளவிலான நூல்களை வாசிக்கும் பழக்கமும் இலக்கியக் கலந்துரையாடல்களில் பங்குபற்றியதன்மூலம் இலக்கியத் தொடர்புகளும், ஆக்க இலக்கியத்துறையில் இலக்கியங்களைப் படைக்கவேண்டும் என்ற ஆர்வமும் மேலோங்கிய தால் அவ்வப்போது பத்திரிகைகளில் கவிதைகளை யும், சிறுகதைகளையும் எழுதி வந்தார். இவற்றின் மூலமே "நெடுந்தீவு மகேசு"என்று இலக்கியத்துறை யில் நன்கு அறியப்பட்டார். ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் கவிதை களையும், சிறுகதைகளையும் எழுதி வந்தாலும் வவுனியாவுக்கு வந்ததால், அதிகளவிலான இலக்கியப் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஏற்பட்டது. வவுனியா வில் கடமையாற்றிய காலப்பகுதியில் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களுடன் பழகி அவர் களது மன உணர்வுகளை அறியக்கூடியதாக இருந்ததால், அவரது இலக்கிய முயற்சிகளுக்கான களம் உருவானது.

நெடுந்தீவு மகேசு அவர்கள் 30 ஆண்டு களாக கல்விச்சேவையில் ஆரம்பக்கல்வி ஆசிரிய ராக, சேவைக் கால ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக எனப் பல்வேறுபட்ட பரிமாணங்களில் கல்விச் சேவையை ஆற்றியதன்மூலம், இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் கல்விச் சமூகத்தினால் நன்கு நேசிக்கப்பட்ட ஒருவராக விளங்கி வருகின்றார்.

அவரை ஒவ்வொருவரும் நேசிப்பதற்குக் காரணமாக இருந்த அவருடைய நகைச்சுவையான உரையாடல்களும், இடையிடையே கதை சொல்லும் பாங்கும், மற்றவர்களுடன் கோபமடை யாது சிரித்த முகத்துடன் பழகும் தன்மையும், ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளை நடத்தும் பொழுது, ஆழமான கருத்துக்களையும், தத்துவங் களையும் மிகவும் எளியமுறையில் எல்லோராலும் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் செயல்முறை ரீதியாகச் சலிப்பின்றி நடத்திச் செல்லும் அவரது ஆளுமை கவர்ச்சிகரமாக இருக்கும்.

நெடுந்தீவு மகேசு அவர்களை முதன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சியில் கல்விக் கழகத்தின் பணிமனையில்தான் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. யாழ்ப்பாணம் இராணுவத் தினரின் முற்றுகைக்குள் கொண்டுவரப்பட்ட பொழுது பலஇலட்சக்கணக்கான மக்கள் தமது பாதுகாப்புக்கருதி ஆபத்துக்கள் நிறைந்த மரணப் பொறி என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட கிளாலி கடல்மார்க்கமாகக் கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்தபோது, நானும் எனது குடும்பமும் இடம் பெயரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதேகாலப் பகுதியிலேயே திரு.மகேசு அவர்களின் குடும்பமும் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்தது. சில நாட்களில் நானும் எனது குடும்பமும் கிளிநொச்சியில் இருந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடி யிருப்பிற்கு இடம்பெயர்ந்து அங்கேயே நாங்கள் நிரந்தரமாகத் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டதால், முல்லைத்தீவு கல்விப் பணிமனை யில் திட்டமிடல் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாள ராக நியமிக்கப்பட்டேன் அதேகாலப் பகுதியில் திரு.மகேசு அவர்கள் வவுனியா கல்வித்திணைக் களத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகராக நியமிக்கப்பட்டார். திரு.செ.மகேசு அவர்கள் வவுனியாவில் வேலை பார்த்துக் கொண்டிருந்த காலத்தில் கல்விக் கழகப் பொறுப்பாளரின் அழைப்பை ஏற்று கிளிநொச்சியில் இருந்த கல்விக் கழகப் பணிமனையில் இருந்து கல்வி அபிவிருததி தொடர்பான சில வேலைத்திட்டங்களில் இணைந்து வேலை செய்யும்பொழுது, அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டபொழுது தான் அவரிடம் இருந்த பன்முக ஆளுமையை என்னால் அறியமுடிந்தது.

அலுவலகப் பணிகள் முடிந்தபின்னர், மாலை நேரங்களில் சுவையான தேநீரையும் அருந்தியபடி, நீண்ட நேரம் உரையாடிக் கொண்டி ருப்போம். எங்களுடன் அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த கல்வித் துறைசார்ந்த நண்பர்கள் சிலரும் கலந்து கொள்வார்கள். அப்பொழுது கல்வி அபிவிருத்தி,வன்னிப் பிரதேச மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி, சர்வதேசக் தமிழ் கல்வி அபிவிருத்தியில் தமிழ் மாணவர்களுக்கான பாடநூல்கள் தயாரித்தல் தொடர்பான திட்டங்கள் பற்றியெல்லாம் மணிக்கணக்காக உரையாடிக் கொண்டிருப்போம் அப்பொழுது திரு.மகேசு அவர்கள் இடையிடையே நகைச்சுவையான கதை களைச் சொல்லி, தனது கற்பித்தல் கால அனுபவங் களையும் சுவாரசியமாகக்கூறி எங்கள் ஒவ்வொரு வரையும் சிரிக்கவைத்து மகிழ்ச்சியில் ஆழ்த்திக் கொண்டிருப்பார். அவருடைய அந்த உரையாடல் களைக் கேட்டுக்கொண்டே அன்றைய பொழுது களை ஆனந்தமாகக் கழித்துக் கொண்டிருந்ததால், தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருந்த போரின் பொழுது ஆங்காங்கே இடம்பெற்றுக் கொண்டி ருக்கும் விமானத்தாக்குதல்கள், எறிகணை வீச்சுக் களினால் தமிழ்மக்கள் அனுபவித்த வலிகளையும் சிறிது நேரம் நாங்கள் மறந்திருந்தோம்.

வவுனியாவில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த திரு.சு.மகேசு அவர்களை வடக்குக் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக இருந்த அமரர் சுந்தரம் டிவகலாலா அவர்கள் திருக்கோணமலைக்கு அழைத்து, கல்வி அமைச்சில் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளராக நியமித்து வடக்குக் கிழக்கு மாகாண பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தியை முன் னெடுப்பதற்கான பொறுப்புக்களையும் கையளித் தார். அதேவேளை சில மாதங்களில் நானும் கல்வி அமைச்சில் பணி புரிவதற்காக திரு.சுந்தரம் டிவகலாலா அவர்களினால் திருக்கோணமலைக்கு அழைக்கப்பட்டேன்.அப்பொழுது, வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி,பண்பாட்டலுவல்கள், விளை யாட்டுத்துறை அமைச்சில் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட "ஆய்வு,அபிவிருத்திப் பிரிவுக்குப்" பொறுப் பான உதவிக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டு ஒரு புதிய சூழலில் நாங்கள் இருவரும் பணிகளை ஏற்றுக்கொண்டோம். அந்தப் பணிகளின் பெறு பேறாக ஆறு ஆய்வு நூல்களை வெளியிட்டோம். அதில் திரு.மகேசு அவர்கள் தனது ஒத்துழைப்பை யும், ஆலோசனையையும் வழங்கியிருந்தார்.

வடக்குக் கிழக்கில் தீவிரமாகப் போர் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் நாங்கள் திருக்கோணமலையிலேயே தங்கியிருந்து வேலை செய்தபொழுது, வடக்கையும், கிழக்கையும் பார்க்க வேண்டியிருந்ததால், எல்லா மாவட்டங்களிலும்



வவுனியா கல்வித் திணைக்களத்தில் பரிகாரக்கல்விச் செயலமர்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களும்,வளவாளர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை இருந்தது. இந்தநிலையில் வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று வரவேண்டிய தேவை இருந்தது. ஆனால் அங்கு செல்வதற்குப் பல்வேறு அழுத்தங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் நாங்கள் உள்ளாக்கப்பட்டோம். வடக்கு மாகாணத்திற்கான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் இறுக்கமடைந்திருந்த நேரத்தில் குறிப்பாக வன்னிப் பெருநிலப் பகுதிக்கும் யாழ்ப்பாணத்திற்குமான பொருளாதாரத் தடைகள் கடுமையாக அதிகரிக்கப்பட்டதால், பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும் தேவையான கற்றல் உபகரணங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் எழுதுகருவிகளையும் எடுத்துச்செல்வதற்கு அரசாங்கம் தடை விதித்திருந்தது.

வடக்குகிழக்கு மாகாண மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு வேலைத் திட்டமாக "ஆய்வு, அபிவிருத்திப் பிரிவினால்" முன்மொழியப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் பரிகாரக்கற்பித்தல் (Remedial Teaching) தொடர்பான ஆசிரியர்களை வலுவூட்டுவதற்கான செயலமர்வுகளை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான செயலமர்வை நடத்துவதற்குப் பொறுப்பாக எங்களை நியமித்தபொழுது, வளவாளர் அணியில் திரு.சு.மகேசு அவர்களும் எங்களுடன் வருகை தருவார்.வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மற்றும் வன்னிப் பிரதேசங்களில் உள்ள பாடசாலை ஆசிரியர்களைத் தவிர ஏனைய மாவட்டங்களுக்கு நேரடியாகவே சென்று செயலமர்வுகளை நடத்துவதில் எங்களுக்கு எந்தச் சிரமமும் ஏற்படவில்லை. அதற்கான தடைகளும் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான பரிகாரக் கல்விச் செயலமர்வுகளை நடத்துவதில் நாங்கள் பலபிரச்சினைகளையும்,சவால்களையும்,அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி இருந்தோம். முதலில் வவுனியாவில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் அங்கு செல்வதற்கான அனுமதியைப் பெற வேண்டும், அதற்கு அப்புறமாக செயலமர்வுகளுக்குத் தேவையான எழுது கருவிகள், பங்குபற்றும் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளுக்கான பணம் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பட்டியலை மூன்று பிரதிகளில் தயாரித்து இராணுவத்தினரிடம் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுத்தபின்னரும் இவற்றை வன்னிக்கு எடுத்துச் செல்வதில்தான் பல தடைகளும், சோதனைக் கெடுபிடிகளும் இருந்தன. இதில் வன்னிக்கான எங்களுடைய அந்தத் துணிகரமான பயணம்தான் எங்களால் மறக்கமுடியாத பல அனுபவங்களைத் தந்தது. வன்னிப் பிரதேசத்தில் செயலமர்வை நடத்துவதற்காகச் செல்வதற்காக நாங்கள் புறப்படும் அலுவலக வாகனத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி கல்வித் திணைக்களங்களுக்குத் தேவையான பெருமளவிலான எழுது கருவிகளையும் ஏற்றிக்கொண்டு சென்றபொழுது, வவுனியா சோதனைச் சாவடியில் எங்களுடைய வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த எழுதுகருவிகளில் பெருமளவைப் படையினர் எடுத்துச் செல்ல அனுமதிக் காததால், பெருமளவிலான எழுதுகருவிகளை எங்களுடைய வாகனத்தில் இருந்தும் வெளியில் இறக்கி வைத்துவிட்டார்கள்.அவை இல்லாவிட்டால் நாங்கள் வன்னிக்குச் செல்வதிலேயே அர்த்தமற்றதாகிவிடும். இந்தநிலையில் மகேசு அவர்களும், நானும் எங்களுக்குள் இரகசியமாகக் கதைத்துவிட்டு, அங்கே எங்களைச் சோதித்துக் கொண்டிருந்த சிங்கள இராணுவத்தினர் தமது சோதனைகளை முடித்தபின்னர், சிறிதுதூரம் அவர்களை அழைத்துச்சென்று சிங்களத்தில் அவர்களுடன் உரையாடி நாங்கள் கொண்டு செல்வதற்காக வைத்திருந்த கையேடுகளைக் காட்டி விளக்கமளித்துக் கொண்டிருந்த பொழுது, எங்களுடன் வந்த ஏனைய வளவாளர்களையும், அலுவலக ஊழியரான காலஞ் சென்ற திரு.நந்தகுமாரையும் அழைத்த மகேசு, கொண்டு செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டு வாகனத்தில் இருந்தும் இறக்கி வைக்கப்பட்டிருந்த எழுது கருவிகளில் பலவற்றை மீண்டும் எங்களுடைய வாகனத்திலேயே ஏற்றுவதில் ஈடுபட்டனர். பெயருக்கு ஒருசில எழுதுகருவிப் பொதிகளை மட்டும் அப்படியே கீழே வைத்துவிட்டு ஏனைய எல்லாவற்றையும் மீண்டும் ஏற்றிவிட்டதில் எங்களுடைய வளவாளர்கள் துரிதமாகச் செயற்பட்டனர். வாகனத்திற்கு வெளியே இறக்கி வைக்கப்பட்ட ஒருசில எழுது கருவிகளை இராணுவத்தினர் பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய வகையில் எங்களை அனுப்புவதற்காக வந்திருந்த பிக்-அப் வாகனத்தில் ஏற்றிவிட்டோம். அந்த நேரம் மகேசு மாஸ்ரர் அவர்களும், எங்களுடன் வருகை தந்திருந்த ஏனைய வளவாளர்களும் அன்று செய்த அந்தத் துணிகரமான வேலையினால் வன்னியில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நூற்றுக் கணக்கான ஆசிரியர் களின் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க உதவியாக இருந்தது.

திரு.மகேசு அவர்களுக்குச் சில பொறுப்புக்கள் கொடுக்கப் பட்டதுடன், செயலமர்வின்பொழுது எவ்வகையான செயற்பாடுகள் வழங்கப்படவேண்டும், எவ்வகை யான கற்றல் உபகரணங்கள் மூலம் செயலமர்வைக் கொண்டு நடத்த வேண்டும் என்ற ஒத்திகைகள் முதல் நாளிலேயே மேற்கொண்டு வந்ததால் நாங்கள் நடத்துகின்ற செயலமர்வுகள் சலிப்பின்றிக் கொண்டு நடத்தக் கூடியதாக இருந்தது. குறிப்பாக திரு.மகேசு அவர்கள் தனது செயலமர்வுக்கான பாடவேளை களின் பொழுது கடதாசிகளில் இருந்தும், பழைய சேலைத் துண்டுகளில் இருந்தும் பொம்மைகளைத் தயாரிக் கும் முறைகளை ஆசிரியர்களுக்குச் செயல்மூலம் கற்பித்துக் கொடுத்ததால் அவரது வகுப்புகள் கலகலப்பாகக் கொண்டு செல்லப் பட்டது. அவ்வா றான ஒரு நிலைமையில் திருக்கோணமலையில் இருந்து பல்வேறு முன்னாயத்தங்களுடன் செயலமர்வு களை நடத்தச்செல்வதால் வன்னிப் பிரதேச ஆசிரியர்கள் மத்தியில் ஒரு உத்வேகமும், தன்னம்பிக்கையும் ஏற்பட்டதுடன், தாங்கள் தனித்துவிடப்பட்டவர்கள் இல்லைஎன்ற மனத் தைரியமும் அவர்களிடையே ஏற்பட்டது. இத்தகைய செயலமர்வுகள் ஆசிரியர்களை வலுவூட்டும் வகையில் இருந்தமைக்கு என்னுடன் வருகை தந்திருந்த வளவாளர்களின் அர்ப்பணிப்பான பங்களிப்பே காரணமாக இருந்தது..



கல்விச் சேவையில் தனது முழுமையான பங்களிப்பைச்செய்து ஆசிரியர்கள் மத்தியில் சிறந்த வளவாளர் என்று பெயர் எடுத்தாரோ அந்த அளவுக்கு அவரின் மறுபக்கமான இலக்கிய ஆளுமையையும், அவர் தனது நூல்களின்மூலம் வெளிப்படுத்தியிருந்தார். ஒரு எழுத்தாளர், நூற்றுக் கணக்கான கவிதைகளையும், சிறுகதை களையும், கட்டுரைகளையும் பத்திரிகைகளிலும், சஞ்சிகை களிலும் எழுதிவந்தாலும் அவரது இலக்கியப் படைப்புக்கள் நூல் உருவாக்கம் பெற்றாலேயே அவருக்கான அங்கீகாரமும் கௌரவமும் கிடைக்கும். அந்தவகையில் நெடுந்தீவு மகேசு அவர்கள் ஈழத்தின் பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் நூற்றுக்கணக்கான ஆக்கங்களை எழுதி வந்தபோதிலும்,அவரால் எழுதப்பட்ட ஆக்கங்கள் நூல் உருவில் வெளியிடப் பட்டபொழுதுதான் அவர் தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டார். அந்தவகையில், அவரது வெளியீடு களாக “மனிதத்தைத் தேடி”,வடமாகாண இலக்கிய விருது பெற்ற கவிதைநூல், “தாரணி ஓர் ஆச்சரியக் குறி” ஆறுதல் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பு, “வாழ்வதற்குப் போராடு” சிறுகதைத் தொகுப்பு, “நான் பிறவாதிருந்தால்” சிறுகதைத் தொகுப்பு, “தொலையா நினைவுகள்” - சுடரொளி வார இதழ்களில் வெளிவந்த பத்தி எழுத்துக்களின் தொகுப்பு, “கலையாகும் கடதாசி” சிறுவர்களுக்கான ஆக்கச்செயல்நூல் ஆகிய ஆறு நூல்களை இதுவரை வெளியிட்டிருக்கின்றார்.

தனது இலக்கிய ஆளுமையின் காரணமாக வன்னியில் இருந்து வெளியிடப்பட்ட “விளக்கு” சஞ்சிகையின் ஆசிரியராகவும், உதயன் பத்திரிகை நிறுவனத்தின் வெளியீடான “அர்ச்சுனா” சஞ்சிகை யின் ஆசிரியராகவும், ஆறுதல் நிறுவனத்தினால் ஆசிரியர்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற் காக வெளியிடபட்ட “ஆறுதல்” சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் கடமையாற்றி அவை சிறப்பாக வெளியிடப்படுவதற்குத் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கினார். இவற்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சியாகத் தனது பல்சுவை ஆக்கங்களையும் எழுதிவந்தார். அதேவேளை உதயன் பத்திரிகையிலும் ஆசிரியர் குழுவில் கடமையாற்றிய காலத்தில் பல்வேறு ஆக்கங்களை எழுதி வாசகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தார்.

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஆகியவற்றில் இருந்தும் தனது பணிநிறைவைத் தொடர்ந்து திரு.சுந்தரம் டிவகலாலா அவர்களின் அழைப்பின்பேரில் திருக்கோணமலையில் இயங்கிவந்த ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுழைப்பதகத்தின் (GTZ) நிபுணத்துவ ஆலோசகராகவும், ஆறுதல் நிறுவனத்தின் ஆரம்பக்கல்விச் செயற்றிட்ட ஆலோசகராகவும் கடமையாற்றிய பொழுதும் ஆசிரியர்களை வலுவூட்டுவதற்காகன (Empowering) பல்வேறு செயலமர்வுகளை நடத்திவந்தார்.

நெடுந்தீவுமகேசு அவர்கள் இலக்கியத் துறையில் ஆற்றிய சேவைகளையும், பங்களிப்புக்களையும் கௌரவிக்கும் வகையில் வடமாகாண நிலையிலான, "முதலமைச்சர் விருது", தேசிய நிலையிலான அதி உயர் விருதான, கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட "கலாபூசணம் விருதுஇயாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட "யாழ் முத்து விருது" ஆகிய விருதுகளைப் பெற்றுக்கௌரவிக்கப்பட்டார். அதேவேளை அவரது சிறந்த ஆக்கங்களுக்காக தினபதி, பத்திரிகை. ஞானம் சஞ்சிகையினால் கவிதை மற்றும் சிறுகதைகளுக்கான பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை அவரது இலக்கிய ஆற்றல்களை வெளிப்படுத்துகின்றது.

இவ்வளவு ஆற்றல்களைக் கொண்டிருக்கும் நெடுந்தீவு மகேசு அவர்கள் தமிழர்களின் தொன்மைகளையும், மரபுரிமைகளையும், மனித அவலங்களையும் ஆவணப்படுத்த முன்வர வேண்டும் என்று அவரிடம் அடிக்கடி கூறிவந்திருக்கின்றேன். அந்தவகையில் 1993ஆம் ஆண்டு, அவரது சொந்தப் பிரதேசத்திலேயே, நெடுந்தீவு மாவிலித் துறைமுகத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட "குமுதினிப் படகு" இடையில் வழிமறிக்கப்பட்டு அதில் பயணம்செய்த குழந்தைகள்,வயோதிபர்கள், பெண்கள் உட்பட 63 அப்பாவிப் பொது மக்களை வெட்டியும், சுட்டும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் சர்வதேச ரீதியாகப் பேசப்படுகின்ற நெடுந்தீவுக் "குமுதினிப் படுகொலை" தொடர்பான விவரணச் சித்திரத்தை முழுமையாக நூல் உருவில் வெளியிட்டு வைக்க வேண்டிய ஒரு வரலாற்றுக்கடமை "நெடுந்தீவு மகேசு" அவர்களிடமே உள்ளதால் தனது அடுத்த வெளியீடாக இதனைச்செய்து முடிக்கவேண்டும் என்று நெடுந்தீவு மக்கள் மட்டுமல்லாது, உலகின் முழுத் தமிழர்களுமே எதிர்பார்க்கின்றார்கள்.

எந்த நேரமும் சிரித்தமுகத்துடன், திரியும் பொழுது, எவர் எந்தக் குறைகளைச் சொன்னாலும், தலையைச் சாய்த்துவிட்டுச் சிரித்தபடியே செல்லும் மகேசுவின் உள்ளத்தில் கவலைகளை நான் பார்த்ததில்லை. ஆனால் அவருடைய நெஞ்சத்தைக் கலங்க வைத்த இரு நிகழ்வுகள் அவரின் உள்ளத்தை இன்றும் உறுத்திக் கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கின்றேன்.

திரு.மகேசு அவர்கள் அதேஇடத்தைச் சேர்ந்த வேதநாயகி அவர்களைத் திருமணம் செய்து அவர்களின் இல்லறவாழ்வின் பயனாக மைதிலி தேவராசா, உப அதிபர் சென்.ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம், ம.பார்த்திபன், யாழ்ப்பாண வைத்தியசாலையில் இரத்தவங்கியில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் ம.பிரதீபன், பிரான்ஸ் TRT வானொலியில் ஒலிபரப் பாளராகவும், நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றும் ஹேமாவதி பொன்னம்பலம், உமாபாரதி மகேஷ் ஆகிய நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்து மகிழ்வோடு வாழ்ந்த காலத்தில் 2002ஆம் ஆண்டு வவுனியா பல்கலைக்கழக வளாகத்தில் கற்றுக் கொண்டிருந்த அவரது கடைசி மகள் உமாபாரதி மகேசு அவர்கள் சுகவீனமுற்ற நிலையில் காலமானார். அவரது மகளின் இழப்பு எவ்வளவு தூரத்திற்கு அவரையும், அவரது மனைவியையும் பாதித்திருந்தது என்பதை அவரது மகளின் இறுதிச் சடங்குக்குச் சென்று பார்த்த பொழுதுதான் அறிந்து கொண்டேன். அதேபோன்று மீண்டும் ஒரு துயரத்தைச் சந்தித்த மகேசு அவர்களுக்கு, யாழ்ப்பாணக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த அவரது மகன் பார்த்திபன் கடந்த 2022ஆம் ஆண்டு கனடாவுக்குச் சென்றிருந்த பொழுது, அங்கே அகால மரணமடைந்த அந்தச் செய்தி மேலும் அவரை மீளாத்துயரத்தில் ஆழ்த்தியது. இவ்வளவு துயரங்களையும் தனக்குள்ளேயே தாங்கிக் கொண்டு வெளியே காட்டிக் கொள்ளாத மகேசு அவர்கள் இன்றும் நிமிர்ந்து நின்று இலக்கியங்களைப் படைத்துவருகின்றார் என்றால் அவரது மனோவலிமையையும், தன்னம்பிக்கையையும், துன்பங்கள் வரும்போது, துவண்டுவிழாது, எதையும் தாங்கும் இதயத்தையும் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுகின்றது...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சு.முரளிதரன்

# நெடுந்தீவு மகேஷின் "மனிதத்தைத்தேடி"




கவிதையின் மைய நீரோட்டமாகக் கற்பனையே அமைகிறது. எனினும் தனியனின் கற்பனை மட்டுமே சிறந்த கவிதையொன்றினை கட்டமைக்கப்போதாது. அவ்வாறான வசீகரக் கனவின் வெளிப்பாடாக அமைவன. கால நீரோட்டத்திலே புறந்தள்ளப்பட்டு விடலாம். கவிதை சமூகக்கீழ்மையை நோக்கித் திரும்ப வேண்டும். சமூக விரோதச் செயல்களால் கவிஞனின் சமனிலை தளம்ப வேண்டும். அவனது படைப்பு வாசகனைத் தொந்தரவு செய்ய வேண்டும். வாசகன் கவிதையைப் புரிந்து கொள்ளத் தொடர் பயிற்சியும் கற்பனையும் அவசியமாகின்றன. கவிஞன் கற்பனை செய்யும் புள்ளிக்கு அருகிலே வாசகன் நெருங்க வேண்டும். ஒருமைப்புள்ளியில் இருவரும் சங்கமிக்கத் தேவையில்லை. அண்மைப் புள்ளியிலே மாறுபட்ட புரிதலின் சாத்தியங்களைக் கட்டமைத்தும் கவிதை வேறுபட்ட வாசிப்பின் வெளியினை வழங்கலாம்.

கவிஞன் மொழியினைத் திரட்சியாக்கு கின்றான். கட்டிறுக்கமானது ஆழ்புலத்திலே சென்று குறியீடாக மாற்றம் பெறுகிறது. இத்தகைய குறியீட்டு உருவாக்கத்தில் அரசியல், பண்பாடு போன்ற பன்முக விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இத்தயை புரிதலோடுதான் கவிதையினை அணுக வேண்டும். எது கவிதை என்பதில் பலருக்கும் பல்வேறு கருத்துகள் உள்ளன. எனினும் சிலவகையான பண்புநிலைகள் அனைவரின் கருத்தோடும் பெரும்பாலும் பொருந்திப் போகின்றன. முழுமையாகச் சொல்லு தல் கவிதையின் வேலையன்று. சொல்லாத விடயங்களே கவிதைக்கு கனதியை வழங்கு கின்றன. விடுபடல் அவசியமான பண்பாகவே அமைகின்றது. படிமமும், குறியீடும் கவிதைக்கு செறிவை நல்கி அடுத்த கட்டத்திற்கு நகர்த்து கின்றன.

மரபுக்கவிதை புதுக்கவிதை நவீனகவிதை என்பனவெல்லாம் தற்காலிகமான பெயரிடலே யாகும். கவிதை என்றும் கவிதை என்ற பெயரோடு தான் அமையும். தமிழ் யாப்பின் விஸ்வரூபத்தை உள்வாங்கியவர்களால் மட்டும், நல்ல கவிதைகளை எழுதிவிட முடியாது. மரபான அணிகள், மணப் பெண்ணுக்கான அலங்கரங்கள் தான்! அலங்காரங் கள் அகன்ற பின்னரும் பெண்மை தனித்துவமாகவே வெளிப்படும். அவ்வாறுதான் மரபின் யாப்பினை புரிந்து கொள்ள வேண்டும். எவ்வகையான கவிதை யாக இருப்பினும் ஓசையினை இனங்காணலாம். எனினும் மரபுக்கவிதைக்குள் மேற்கிளம்பும் ஓசை தனித்துத் தெரிகிறது. முகிழ்நிலைக்காலத்தில் ஓசைக்கு அமைவாகச் சொற்களை காலத்தில் ஓசைக்கு அமைவாகச் சொற்களை இட்டு நிரப்பு கின்ற பண்போடுதான் பலரும் கவிதை புனைய முயல்வதுண்டு. புத்தாண்டு, பொங்கல், மேதினம் எனப் போற்றுதல்களும், திருவள்ளுவர், பாரதியார் எனத் தொழுகைக் குறித்தான விம்பங்களை வியக்கும் ஆராதனைகளும் ஆரம்ப காலக் கவிதை களின் முகவரியாக அமைவதுண்டு. இவற்றிலிருந்து விடுபட்டு அடுத்த கட்டத்திற்கு செல்லுதல் மிக அவசியமானது. நெடுந்தீவு மகேஷின் "மனிதனைத் தேடி" என்ற கவிதைத் தொகுப்பானது முகிழ்நிலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிதைகளுக்கான அடையாளத்தோடு தான் அமைந்துள்ளது. இக்கவிதைகளின் பண்புகளைக் குறித்து அவரும் நன்குணர்ந்திருப்பார் என்றே நம்புகின்றேன்.

மனிதத்தைத் தேடி என்ற தொகுப்பானது 2002 நவம்பரில் கதிரவன் வெளியீட்டகத்தால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. வல்வை ந.அனந்த ராஜ் அணிந்துரை வழங்கியுள்ளார். 103 பக்கங் களைக் கொண்டமைந்துள்ளது. மொத்தமாக 73 கவிதைகள் காணப்படுகின்றன. பத்திரிகை, சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தொகுப்பிலுள்ள அனைத் துக் கவிதைகளும் முகிழ்நிலைக்கால முதிர் வின்மையோடு அமைந்துவிடவில்லை. பொங் கலில் முந்திரிபோல ஆங்காங்கே ஆச்சரியங்களும் காத்திருக்கின்றன. எதிர்காலத்தில் நற்கவிதை உருவாக்கத்திற்கான கட்டியத்தையும் இனங்காண முடிகிறது. இன்றைய தகுதி நிலைக்கான குறி காட்டியை அன்று விதைத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. எனது புரிதலில் அவை தனித்துத்தெரிகின்றன. எனினும் பிறிதொருவரால் மறுதலிக்கப்படவும் இடமுண்டு. இத்தொகுதி முழுமையும் உன்னதமென்று கொண்டாட முனைவோரும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. அவரவர் தரிசனத்தில் சொற்களின் அடுக்கமைவு கள் வெவ்வேறு அர்த்தப் பரிமாணங்களை வழங்க லாம். பொதுவாக ஈர்ப்புக்குரியதாக அமையக் கூடிய விடயங்களாக கருதுபவற்றைப் பதிவு செய்ய முனைகிறேன்.

“பேய் எங்கே?” என்ற கவிதையில் தலைப்பில் அதிர்வினை உண்டாக்கி வாசகனை உள்ளீர்க்குகிறது. சமூகக் கசப்பை பாடு பொரு ளாக்கியுள்ளார். எனினும் மரபு வழியான ஓடு பாதையினை விட்டு விலகவில்லை. வடிவம் மரபிலே இருந்தாலும், உள்ளடக்கப் புதுமையே கவிதை யைக் காத்திரமாக்குகின்றது. பேயானது மயானத் திலே இல்லை; தியான தரிசனத்தோடு நோக்கி னால் மனத்துக்குள்ளே சிரிக்கும். காமம், கையூட்டு என்ற வகையில் நம்முள்ளே ஒளிந்திருக்குமென விளக்குகின்றார்.

மரபுக் கவிதையின் ஓசையடுக்கினை நன்குணர்ந்து சொற்களைச் சரியான இடத்திலே அமர்த்துவதிலே நெடுந்தீவு மகேஷ் விண்ணர் என்பதையும் பல கவிதைகளில் உணர முடிகிறது.

**“தூதுவளை முசிட்டையிலை முருக்கைக்கீரை**
**தும்மைக்காய் என்னருசி குறிஞ்சாச்சுண்டல்**
**ஏது இணை இவைக்கின்று என்ன ஆச்சு**
**ஏதேதோ மேல்நாட்டுமோகம் தாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமடா தம்பியிந்தப் புழுங்கும் கேக்கும்
பூச்சடித்த சுவருக்குள்ளே குப்பை கூழும்
தாதுநிறை எம் உணவை நீக்கிவிட்டு
தரித்திரத்தைக் காதலித்தோம் எங்கள் பாவம்"

"அந்த நறுஞ் சீருணவு எங்கே?" என்ற கவிதையில் பேச்சோசைப் பண்புகளோடு இயல்பான ஓட்டத்தோடு நகர்த்திச் செல்லும் விதம் அருமையாக உள்ளது. "இன்னுணவாய் மாற்றிடுவீர்" கவிதையில் உலகின் இழி நிலையைப்பதிவு செய்கிறார். மனித சமூகம் உணவின்றி அல்லற்படுகின்ற காலத்தில், சர்வதேசமும் போராடி தங்களை உற்பத்தி செய்கிறது.

"ஆளைஆள் தின்னுமொரு
அவலநிலை ஆகுமுன்னர்
ஏழைகளுக் கிண்ணுணவாய்
எறி குண்டை மாற்றிடுவீர்"

என்று சமூகம் அக்கறையோடு முன்வைக்கிறார். வெவ்வேறு பொறிமுறைகளையும் அனுசரித்திருந்தால் இத்தகைய கவிதைகள் பெருங்கவனக் குவிப்பினைப் பெற்றிருக்கும் என நம்புகிறேன்.

கடந்த காலங்களில் மீதேறி நின்றே நிகழ்காலத்தை தரிசிக்கின்றோம். முன்னைய கவிஞர்களின் அருட்டுணர்வு இல்லாமல் புத்தாக்கம் தோன்றுவது அரிதிலும் அரிதாக நிகழ்கிறது. "மேதினமே" என்ற கவிதையில் பாரதிதாசனின் அருட்டுணர்வினை இனங்காண முடிகிறது.

"காட்டைத்திருத்திக் களனிகள் ஆக்கிக்
களித்தவர் செல்வமுற
வாட்டமது ஓட்ட வருந்தித் தொழில்புரி
வல்லவர் நல்லவர்கள்
நாட்டை விருத்தி செய் வீரமாள் வேங்கைகள்
நல்லுழைப்பாளர்கரம்
கூட்டியவர் துயர் போக்க உழைத்திரு
குரல் கொடு மேதினமே"



தமிழுலகில் ஆளுமைக்குரிய விம்பங்களைப் போன்றுகின்ற கவிதைகளையும் ஓசைப்பண்பு மிளரவே உருவாக்கியுள்ளார். "பாரதநாடு தந்த கவி பாரதி" கவிதை வீறுகொண்ட உணர்வினைத் தொற்றச் செய்கிறது. பாரதியிடம் பலரும் நோக்கும் பரிமாணங்களையே கவிஞரும் பதிவு செய்வதால் தேய்வியம்பலாகத் தென்படுவதும் தவிர்க்க முடியாத விடயமாகின்றது.

வியத்தரு ஆற்றலும் விந்தை மொழியும் கொண்ட கவிஞராகவும் நெடுந்தீவு மகேஷ் ஓரிரு கவிதைகளில் இனந்தெரிகிறார். இதுவல்லவோ மொழியை முகாமை செய்யும் விதம் என ஆச்சரிய மூட்டுகின்றார்.

"நிமிர்"என்ற கவிதை தக்க சான்றாக அமைகின்றது.

நிமிர்

காலப் பேரோடுதனை விரி
நிலை குலைந்த
கதையின் துயர்வரியை அழி

நீலப் பெருவெளியை உடை
எழில் விளங்கும்
நிலவோ டொளிர் உடுக்கள்தொடு

ஞாலத்துறு மகிமை வளர்
கற்றுயர்ந்து
ஞானப்பண் பாடியிறை தொழு

ஓலப்புயல் கடக்க நிமிர்
வாழ்வுறுதி
உழைப்புக்கரமிணைப்பு உணர்

"மனிதத்தைத்தேடி" என்ற தொகுப்பிலுள்ள கவிதைகள் முகிழ் நிலைக் கால முயற்சிகளாகவே நோக்கத்தக்கன. ம.பார்த்தீபனின் சவர்க்கார சிற்பங்கள் அட்டைப்படத்திற்குப் பேரழகினை வங்கியுள்ளன. இவற்றை விட மோசமான கவிதைகளை ஆரம்பகாலத்தில் நானும் எழுதியிருக்கிறேன் என்ற புரிதலோடு தான் கருத்துக்களைப் பதிவு செய்கின்றேன். எனது நோக்கம் காயப்படுத்துவதல்ல... கவிஞரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்ல வேண்டும் என்பதே! தொடர்ந்து பயணிக்கவும் என்று வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகாணாக் கேள்விகளோடு வாழும் ஒரு சமூகத்தின் உணர்வுப் படிமங்களாய் நெடுந்தீவு மகேசின் "வாழ்வதற்குப் போராடு" சிறுகதைத் தொகுப்பு




எழுத்தாளரும் பத்திரிகையாளருமாகிய செல்லத்தம்பி மகேஷ் என்ற இயற்பெயர் கொண்ட நெடுந்தீவு மகேஷ் ஆசிரியராகவும், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கல்விப் புலத்தில் பணியாற்றியவர் தன் அனுபவத்தின் நீட்சியாக பத்திரிகையாளராகவும், அரசசார்பற்ற நிறுவனத்தில் வளவாளராகவும், ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார். அவரின் நான்காவது நூலாக "வாழ்வதற்குப் போராடு" என்ற சிறுகதைத் தொகுப்பு 2020 இல் வெளியிடப்பட்டது. 19 கதை களை உள்ளடக்கி 136 பக்கங்களில் கல்வியிய லாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர் களின் அணிந்துரையுடனும், எழுத்தாளர் வல்வை ந.அனந்தராஜ் அவர்களின் வாழ்த்துரையுடனும், எழுத்தாளர் கந்த பேரின்பனின் அறிமுகவுரை யுடனும் இந் நூல் கனதிபெறுகின்றது. 1966 இல் "ஊமை" என்ற சிறுகதை மூலம் மாவுறையூர் மகேந்திரன் என்ற புனைபெயருடன் தினபதி நாளிதழில் தனது சிறுகதைப் பயணத்தை ஆரம்பித்தார். "கலையாகும் கடதாசி" என்ற சிறுவர் செயல் நூலையும், "மனிதத்தைத் தேடி" என்ற கவிதைத் தொகுப்பையும், "தாரணி ஓர் ஆச்சரியக் குறி" என்ற சிறுகதைத் தொகுப்பையும் இதுவரை யில் வெளியிட்டுள்ளார்.

போர் விழுங்கிய பூமியில் இன்னமும் விடை காணமுடியாத வினாக்களோடு நடைபிணங்களாய் வாழும் மனிதர்களை தினமும் தரிசிக்கும் சராசரி மனிதர்களாக வாழப் பழகிய எமக்குள் கடந்தகால கசப்பான அனுபவங்களை மீள் நினைவூட்டும் கதை களாக பெரும்பாலான கதைகள் எழுதப் பட்டுள்ளன. காணாமற்போதல், இனந்தெரியா தோரால் நிகழ்த்தப்பட்ட கொலைகளின் வலிகள், தற்கொலைகள், இளையோரின் வழிதவறிய பாதை, தாய் உணர்வு, கல்விச்சாலைகளின் பொருத்தமற்ற செயற்பாடுகள், பதவியும் பணிவிழப்பும், நில அபகரிப்பு, முதலாளித்துவம் போன்ற விடயங்களே கதைகளின் கருப்பொருட்களாக இடம் பிடித் துள்ளன. நெடுந்தீவு பல இலக்கியவாதிகள் ஊற்றெடுத்த நிலம். சொந்த நிலம்விட்டகன்ற பல படைப்பாளிகளின் பேசுபொருளாக அமைந்த தம் நிலமும் அதன் அடையாளம் சார் பண்புகளும் அவர்களின் மனதில் ஒட்டியிருப்பதற்கு இந்த நூலும் ஒரு ஆதாரம். நெடுந்தீவு மகேசின் நீண்டகால ஆசிரியப் பணியின் அனுபவத்தின் விளைவாக பெரும்பாலான கதைகளில் தவிர்க்கமுடியாத பாத்திரங்களாக ஓய்வுபெற்ற வாத்தியார்கள் வலம்வருவது கவனத்திற்குரியது. சமூகத்தை சரியான பாதையில் செலுத்தி கரைசேர்க்கும் கலங் கரை விளக்கங்களாக ஆசிரியர்களை இனங்காட்டி நிற்கும் கதைப்பாங்கை அவரது அனைத்துக் கதைகளிலும் நாம் காணலாம். தனது முதலாவது கதையான "ஊமை" இந்த தொகுப்பின் இறுதிக் கதையாக இடம்பெற்றிருப்பது சமூகப் பிரச்சனையி லிருந்து சமகாலப் பிரச்சனைக்கான அவரது மாற்றத்தின் பரிமாணத்தை உணர்த்திச் செல் கின்றது. நீண்டகால எழுத்து அனுபவத்தினால் கதைகளில் சில இடங்களில் காணப்படும் பரம்பரை அல்லது கால இடைவெளிகளை உணர்வுகளால் நிரப்பியுள்ளார். அன்றும் இன்றும் நிலவிவரும் பிரச்சினைகளின் அடிப்படைகள் ஒன்றாகவே இருப்பதும் இதற்கு ஒரு காரணியாக அமைந்து விடுகின்றது.

"கூத்து" என்ற இத் தொகுப்பின் முதலாவது கதை பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சூறை யாடப்பட்ட வாழ்வாதாரமாய் இருந்த ரீ கடையுடன் கூடிய நிலப்பரப்பின் கதை. உயிர்பிழைத்து வாழும் நோக்கில் ஒன்றாய் ஒரே நேரத்தில் நிலம்விட்ட கன்ற சமூகத்தால் ஒரே நேரத்தில் மீள்குடியேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமற் போன துர்ப்பாக்கிய நிலையின் தூறல்களாய் எம்மை நனைத்துச் செல்கின்றது. மீள் குடியேறும் முதற்குடியினரை ஏழைகள் என்று வகைப்படுத்தும் வம்சமாக எம்மைத் தரமுயர்த்தும் சமூகத்தால் அவர்களின் ஊர்ப்பற்றையோ நிலத்தின் மீதான பற்றுதலையோ எடைபோட முடிவதில்லை என்பதற்கு "கூத்து" ஒரு நல்ல உதாரணம். நிலத்தை மீட்டுத்தருவதாக தேர்தற் காலங்களில் படியேறும் பெருமாள்களின் சூழ்ச்சியும் அவர்களின் ஆட்சியும் எம் இனத்தின் சாபக் கேடாக சலித்துக்கொள்ளும் எழிலன் குடும்பம் நாம் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தின் அடையாளம். எழிலன் குடும்பத்தைப்போல் தமது பிரச்சினை தீருமென்ற கனவோடு பலர் அடுத்த தேர்தலிலும் அவர்களுடன் கொடிபிடிப்பர் என்ற அரசியல் சாணக்கியத்தை "கூத்து" என்று தலைப்பிட்டுள்ளார்.

தற்காலத்தில் தலைதூக்கி நிற்கும் தற்கொலைகள் பற்றிய கதையாக இந் நூலின் தலைப்பான "வாழ்வதற்குப் போராடு" கதை அமைந்துள்ளது. சமூக விழிப்புணர்வையும் தற்கொலை எண்ணத்தோடு இருப்பவர்க்கு நம்பிக்கையூட்டும் விதத்திலும் விசாலாட்சி ஆச்சி என்ற பாத்திரம் படைக்கபட்டுள்ளது. பிரச்சினைகள் மனிதன் தோன்றியதிலிருந்து எம்முடன் கூடப் பயணிக்கின்ற ஒன்று. அதற்கு அந்தக் காலத்து விசாலாட்சியோ இந்தக்காலத்து சுகிர்தாவோ வேறுவேறல்ல இருவரும் ஒன்றுதான். ஆனால் அவர்கள் வாழ்நத காலப்பகுதியும் சூழலுமே வாழ்வதா சாவதா என்ற முடிவை எடுக்க வைத்துள்ளது என்று உணர்த்துகின்றது இந்தக் கதை. தற்கொலை செய்தவர்களின் மரணச்சடங்கு சோகங்களைத் தாண்டி புதினம் விசாரிக்கவும், தம் மனதிற்பட்டதை திரிபுற புனைவதற்குமான களமாக மாற்றும் சமூகத்தின் முன் தற்கொலை எத்தகைய முட்டாள்த்தனம் என்பதை உணர்த்தும் வகையில் கதையின் சம்பாசனைகளை ஒழுங்குபடுத்தியுள்ளார். பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக எண்ணி பெற்றோர், கணவர், பிள்ளைகள் மீது பழி சுமத்திவிட்டுப் போகும் தற்கொலையை கண்முன் காட்டியுள்ளார். விசாலாட்சி ஆச்சியின் அந்தக் காலத்து காதல் தோல்வியின் பின்னரும் அவர் வாழ்ந்த அந்த வாழ்வுபற்றிய பதிவும் சுகிர்தாவின் தற்கொலையையும் "வாழ்வதற்கு போராடு" என்ற தராசில் இரு தட்டிலும் வைத்து வாழ்தலின் மகத்துவத்தை விளக்கியுள்ளார். தற்கொலையை ஒரு தீர்வாக இனிவரும் சமூகம் எடுத்துவிடக்கூடாது என்ற எண்ணத்தோடு எந்த இடத்திலும் தற்கொலையை நியாயப்படுத்தமால் தவிர்த்ததும், தற்கொலைக்கான காரணத்தைத் தவிர்த்ததும் கதை நகர்வின் சமூகப் பொறுப்புணர்விற்கு ஒரு சான்று.

நூலாசிரியரின் நடுநிலைத் தன்மையை நிலை நிறுத்தும் கதைகளாக பாடசாலை மற்றும் கல்வி சார்ந்த கதைகள் இந்தத் தொகுப்பில் இடம் பிடித்திருப்பது நோக்குதற்குரியது. "நிக்ஷா அழுகிறாள்", "பண்பு தவறிய" ஆகிய கதைகள் இன்றய கல்விச் சாலைகளின் பொறுப்பு விலகிய நிலையையும் வாழக்கற்றுக்கொடுக்காத கல்வியையும், கல்விப் புலத்தின் தவறான நியமனங்களையும் சாடும் கதைகளாக அமையப்பெற்றுள்ளன. பெயர் எடுத்த பாடசாலைப் பிள்ளைகளின் சமூகவிரோதச் செயல்களையும், தொழில்நுட்ப வளர்ச்சியால் கல்வியில் ஏற்பட்ட பின்னடைவுகளையும் எண்ணி வருந்தும் ஓய்வுபெற்ற ஆசிரியரின் குமுறல்களாக தந்திருப்பது கற்போருக்கும் கற்பிப்போருக்குமான ஒரு சிந்தனைத் தூண்டலை ஏற்படுத்தும். "நிஷா அழுகிறாள்" என்ற கதையின் கருப்பொருள் ஒப்பீட்டளவில் பெறுமதி குன்றியதாக பலருக்கும் தோன்றலாம் ஆனால் கவனிக்கப்படாத அந்தக் கருப்பொருள் சாதிக்கமுயலும் ஒவ்வொரு மாணவருக்கும் பெரும் தடைக்கல்லாக மாறி அவர்களை பின்னகர்த்திவிடும். அவர்களின் முயற்சிகளை நிறுத்திவிடும். மாணவர் மையக்கல்வியாகவே கல்வித் திட்டம் அமையவேண்டும் அதுபோல பிள்ளை மைய நிலையமாகவே பாடசாலைகள் திகழவேண்டும். ஆரசியல்வாதிகளின் ஆடுகளமாக கல்விச்சாலைகள் மாறியிருப்பது எமது வீழ்ச்சிக்கான அறிகுறிகளே. பாடசாலைகளில் நடைபெறுகின்ற நிகழ்வுகளில் அமைச்சர்கள் அல்லது அரசியல்சார் பிரதிநிதிகளின் கௌரவ பங்கேற்புக்கள் பிள்ளைகளைப் புறக்கணித்தும், அவர்களின் திறமைகளை மழுங்கடித்தும், அவர்களின் இயல்பு நிலையையும், பாடசாலையின் முன்மாதிரிகளையும் எப்படிப் பாதிக்கின்றது என்பதை இக்கதை உணர்த்துகின்றது.

நம் தேசத்தின் வீதிகள் மழை நீரில் நனைந்ததைவிட எம் உறவுகளின் குருதியில் நனைந்த ஒரு காலத்தைக் கடந்தும் மறந்தும் வந்திருக்கின்றோம். மனிதன் காணாமற்போக ஆரம்பித்த காலத்திலிருந்தே நின்மதியும் தொலைந்து, நிஜமும் தொலைந்து, கண்ணீரை அடக்கி ஊமைக்கோலம் பூணடுவிட்டோம். அவற்றை குருதிவாடையோடு மீண்டும் அதே அனுபவத்தை ஏற்படுத்தும் கதைகளாக "மரணமே உன் கூரெங்கே", "சாட்சி", "ஓர் உயிரின் ஓலம்", "இன்னமும் நாட்களாகலாம்" ஆகிய கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் தவிர்க்கமுடியாத கதைகளாக இடம் பிடித்துள்ளன. எந்த எழுத்தாளனும் தாண்டிச் செல்ல முடியாத போரின வடுக்களுக்கு முக்கியத்து வம் கொடுக்கும் நூலாக இது அடையாளப்படுத்துப் பட்டிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவற்றை எழுதும் துணிவும், எப்படி எழுதுவது என்ற தெளிவுமே இங்கு தேவைப்படுகின்றது. அவரது அனுபவத்தின் திரட்சியாகவே இத்தகைய கதைகளைக் காணமுடிகின்றது. இழப்புக்களும், வலிகளும், தவிப்புக்களும் வாசகனை உளரீதியில் பெரிதளவில் பாதிக்காத வகையிலும் அதேவேளை உணர்வுகளை உய்த்தறியக்கூடிய வகையிலும் கதைகளும் பாத்திரங்களும் வடிவமைக்கப் பட்டுள்ளன.

மரணங்களை நிகழ்த்துவது இயமன் என்ற நம்பிக்கை மிக நீண்டகாலமாக நம்மிடையில் இருந்து வந்துள்ளது. அந்த நம்பிக்கைகளை குறுக்குவிசாரணை செய்யும் கதைகளாக இவை அமைந்துள்ளன. ஒரு மனிதனின் மரணத்தை இயமன் தீர்மாணிக்கின்றான் என்றால், "இனந் தெரியாதோரால் கொல்லப்பட்டார்" என்ற பத்திரிகைகளை நிரப்பிய செய்திகளில் வந்த அந்த இனந்தெரியாத கொலையாளிகள் யார்? இயமனை விடுத்து மனிதனே இயமனின் பணியைச் செய் கிறானா?. போன்ற வினாக்களை எழுப்பி நிற்கும் கதைகள் இவை. "இயமன்களாய் உலாவரும் மனிதர்களைப் பார்க்கின்றேன். இயமன்களே! நீங்களும் மனிதர்களாய் எத்தனை ஆண்டுகள் நிலைத்திருக்கப் போகின்றீர்கள்?" என்று ஆதங்கப் படும் நூலாசிரியரின் கோபமும் கேள்வியும் நியாய மானதே.

"இன்னமும் நாட்களாகலாம்" என்ற கதையின் கருவாக கடத்தல், காணாமற்போதல், கொலை, புலனாய்ளர்களின் விசாரணை என்று தொடர்ந்து அச்சுறுத்தும் தேசத்தில் உயிர் அச்சத்தில் வேலைக்குச் செல்லாமல் தன்னைத் தானே தனிமைப்படுத்தும் திருமுகம் என்ற ஒரு அலுவலகரின் மனப்போராட்டம் அமைகின்றது. உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணி வழங்கப்பட்ட உளவளத்துணை அவருக்கு மாற்றத்தைக் கொடுத்தாலும் பணிக்கு அவரால் திரும்ப முடியவில்லை. அதற்கான காரணத்தைக் கேட்ட உளவளத் துணையாளரிடம் திருமுகம் என்ற அந்தக் கதாபாத்திரத்தின் வாயிலாக தன் மனதில் எழுந்த விடைகிட்டாத கேள்விகளைத் தொடுத் துள்ளார். "நீங்க ஆலோசனை தந்தீர்கள் நான் எனது அச்சம் துறந்து வெளியே வந்துவிட்டேன். ஆனால் காணாமற் போகச் செய்வோரும் கொலைகாரர்களும் எமது சுற்றாடலிலேயே இன்னமும் இருக்கின்றனர் அவர்களுக்கும் ஆலோசனை வழங்கிவிட்டீர்களா?. இவர்களுக்கு ஆலோசனை வழங்கப்போவது யார்?" என்ற வினாக்கள் பாதிக்கப்பட்டவர்க்கு மட்டும் நிவாரணத்தையும் ஆலோசனைகளையும் வழங்கி தற்காலிகத் தீர்வை எட்ட முயலும் சமூகத்தின் தலையீடுகளை புடம்போட்டுக் காட்டுகின்றார். பாதிக்கப்பட்டவருக்கான ஆலோசனைகள் வீட்டிற்குள் நடமட உதவும் ஆனால் வீதியில் நடமாட வேண்டுமானால் பாதிப்பை ஏற்படுத்திய வர்களின் மனமாற்றத்திற்கு அல்லது குணப்படுத்த லுக்கு ஆலோசனை வழங்க்போவது யார்?. இது போன்ற பல வினாக்கள் நெடுந்தீவு மகேசிடம் மட்டுமல்ல எங்களுக்குள்ளும் இன்னமும் உயிர்ப் போடுதான் இருக்கின்றது.

பிரச்சினைகளை இரு வகையாகப் பார்க்க லாம் ஒன்று தீர்வைப் பெறும் பொறுப்பு எம்மிடத்தில் இருக்கும் பிரச்சினைகள், இரண்டாவது பிரச்சினை கள் மட்டுமே எம்மிடத்தில் இருக்க தீர்வுக்கு பிறரிடத்தில் தங்கியிருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட மூன்றாம் தரப்பால் வழங்கப்படவேண்டியிருப்பது. "பிரச்சினை தீர்ந்தது" என்ற கதை விசாரணைக்கு அழைக்கப்பட்டு வீடு திரும்பாத தன் மகனைத் தேடியலையும் ஒரு முதுமை எய்திய தாயின் கதை. அவளது பிரச்சினை தான் இறக்கும் முன் தனது மகன் வீட்டிற்கு வந்துவிடவேண்டும் என்பது. காணாமல் போனோரை வைத்துப் பிழைப்பு நடாத்துவது அரச தரப்பு மட்டுமல்ல இடையிலுள்ள சில தரகர்களும்தான். இங்குள்ளார், அங்குள்ளார், அவரைச் சந்தித்தால் விடைகிடைக்கும், இவரைச் சந்தித்தால் விடை கிடைக்குமென்ற பேச்சுக்களை நம்பி ஆயுள் முழுவதும் அலைந்து நொந்துபோகும் தாய்தந்தையின் வகைதொகைகள் நம் மண்ணில் ஏராளம் செல்லாச்சி என்ற பாத்திரம் இவர்களின் ஒரு பிரதிநிதியாக நம்முன் நூலாசிரியர் நிறுத்தியுள்ளார். மகன் வருவானென்ற நம்பிக்கையோடும், யாராவது கைகொடுப்பார்களா என்ற எதிர்பார்ப்புடனும் வாழ்வின் இன்ப துன்பங்களையெல்லாம் துறந்து உயிரை மட்டும் கையில் பிடித்திருக்கும் செல்லாச்சி போன்றோர்க்கு அவர்களின் அர்த்தமற்ற மரணத்தையை தீர்வாகக் கொடுத்து விடுகின்றனர். அவர்களுடன் பிரச்சினையும் புதைக்கப்பட்டு விடு கின்றது. இந்தப் பொறிமுறையே எமது தேசத்தின் உயரிய தீர்வுப் பொதி என்பதை இக்கதையின் வாயிலாக உணர்த்தியுள்ளார்.

"பாமாதேவியின் வலம்" என்ற சிறுகதை தகுதியற்ற பதவியுயர்வையும் அதன் பணிபிழப்பினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் குறித்து நிற்கின்றது. திறமைக்கு அப்பால் உயர் அதிகாரிகளிடம் பாசாங்குசெய்து அவர்களின் மனதில் இடம்பிடித்து பதவி ஆசனங்களை கையகப்படுத்தும் குறுக்குவழி தெரியாவிட்டால் திறமையுள்ளவர்களும் நேர்மையாக உள்ளவர்களும் பின்தள்ளப்பட்டு விடுகின்றனர். இருப்பினும் மக்களின் கணிப்பும் நிலைப்பாடும் அவர்களின் இறுதிக் காலத்தில் புரிந்துவிடும். குறிப்பாக அவர்களின் மரணச் சடங்குகளில் கூடிவரும் மக்களே அதனை உணரத்தி நிற்பர் என்பதற்கு இந்தச் சிறுகதையை ஒரு சிறந்த உதாரணமாக முன்வைத்துள்ளார்.

"அப்பா", "பெற்ற மனங்கள்", "பண்பு தவறிய" போன்ற கதைகள் பெற்றவர்களின் பாசத்தையும் தவிப்பையும் சமகாலத் தளத்திலிருந்து எழுதப்பட்டவையாக அடையாளப்படுத்தி நிற்கின்றன. பிள்ளைகளின் நடத்தைப் பிறழ்வுகளினால் ஏற்படும் விளைவகளையும் அதனால் பெற்றமனங்களில் ஏற்படும் பாசப் போராட்டத்தையும் வெளிப்படுத்தியிருக்கும் விதம் ஒவ்வொரு பெற்றறோரினதும் பிள்ளைகளினதும் பொறுப்புக்களை உணர்த்தி நிற்கின்றது.

"ஊமைக் காயங்கள்" தான் நேசித்து வாழ்ந்துவந்த வீட்டை விட்ட கன்ற ஒரு மூதாட்டியின் மனவேதனையைக் காட்டும் கதையாகவும், "பாதை மாறும் பயணங்கள்" யுத்த முடிவில் முகாமுக்குள் இருக்கும் தனது குடும்பத்தை மீட்டெடுக்க பல பிரயத்தனங்களை மேற்கொண்டும் தோற்றுப்போன ஒரு தந்தை இலஞ்சம் கொடுத்தாவது வெளியிலெடுக்கத் துடிக்கின்றார். அத்தருணங்களில் ஏற்படும் மனச்சாட்சிக்கும் பாசத்திற்குமான போராட்டமாகவும். "வாழாத வாழ்க்கை" தம் உயிர்காக்க தனக்கு அடைக்கலம் தந்த குடும்பத்தையே காடையர்கையில் பலி கொடுத்து தன்னை மட்டும் பாதுகாத்து தப்பி வாழும் ஒருவரின் தவறுணர்ந்த மனநிலையையும் படம்பிடித்துக் காட்டியுள்ளமை தப்பிப்பிழைத்து வாழும் காட்டு விதிமுறைகளின் சாயலாகிப் போகின்றது.

மனிதனை மனிதன் கொன்றொழிக்கும் கொலைக்கள சமவெளியில் விலங்குகள் தண்டிக்கப்படுவது கணக்கில் வராத பாவங்களாகிப் போயின. அதனை உணரத்தும் விதத்தில் "வாயில்லாப் பிராணி", "அழுத்தும் துயரங்கள்" ஆகிய சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. மனிதனைப் பழி தீர்ப்பதும் நாம் செய்யும் காரியங்களில் இலஞ்சம் குடிகொள்வதும் சாதரணங்களாக்கிய எமக்கு தவறுணர்த்தும் கதைகளாக இவை மனதில் இடம்பிடித்து விடுகின்றன. உழைப்பவனுக்கே இந்த மண் சொந்தமென்பதை உணர்த்தும் "விளையும் விளைவுகள்" மண்வாசனையுடன் இடப்பெயர்வுகளின் இன்னொரு விளைவாகவும் அமைந்த கதை. தனது முதலாவது கதையான "ஊமை" என்ற இநுதிக் கதை முதலாளி வர்க்கத்தின் கஞ்சத்தனத்தையும் ஏழைக் கூலியாளியின் குடும்ப நிலைக்குமிடையில் ஊசலாடும் ஒரு ஏழைக் குடும்பத் தலைவனின் பொருளாதார நிலை அவனை கடன் கேட்க தூண்டகின்றது. இருப்பினும் முதாலாளித்துவம் அவனை ஊமையாக்கிவிடுகின்றது. 1969 ஆம் ஆண்டின் பேசுபொருளாக இருந்த வர்க்க வேறுபாட்டையும், நாணயமற்றவர் கையிலேயே நிதி சேருவதும், கூலித் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதுமான துர்ப்பாக்கிய நிலைகள் இன்றுவரை தொடர்கின்றது.

கதைகளில் கற்பனைகளின் செறிவு மிக மிகச் சொற்பமே. எழுதப்பட்ட கதைகள் உண்மைச் சம்பவங்களை அடியொற்றியவையாக இருந்ததால் கற்பனைகள் கதைகளின் கனதியை குறைத்து விடுமென்ற எண்ணத்தின் விளைவாக இருக்கலாம். அத்தோடு சில கதைகளில் கட்டுரைப்பாங்கும் மேலோங்கி நின்றதைக் காணமுடிகின்றது. மனதை அழுத்தியிருக்கும் உணர்வுகளின் வார்ப்பாக வெளிவரும் கதைகளில் கட்டுரைப்பாங்கு தலைதூக்குவது இயல்பாகிவிடுகின்றது. உணர்வெழுச்சி மேலோங்கும்போது கட்டுடைப்புக்கள் நிகழ்ந்து விடுகின்றன.


அனைத்துக் கதைகளும் அவரைச் சுற்றி நிகழ்ந்தவையாகவோ அல்லது அவர் அவதானித்தவையாகவோ இருந்திருக்கவேண்டும். குறுங்கதைகளாகவும் மட்டுப்படுத்தப்பட்ட கதாபாத்திரங்களின் கட்டமைப்பும் தற்பொழுதுள்ள வாசிப்பு வறட்சிக்கு ஏற்ப அமைக்கப்பெற்றிருப்பது வாசிக்கத் தூண்டுவதாக உள்ளது. ஆனாலும் தான் எடுத்துக் கொண்ட கருப்பொருள் சிதைவுறாமல் கனதியான பாத்திரங்களும் அவர்களின் உணர்வும் சிறப்பாக முன்வைக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கதைகளிலும் முடிவுகள் தொக்கு நிற்பதால் முடிவுகளிற்கு முற்றுப்புள்ளி வைப்பதா அல்லது கதைகளின் நீட்சியாக வாசகனின் தேடல் தொடங்குமா என்பது ஒவ்வொரு வாசகனதும் வாழ்வனுபவங்களைப் பொறுத்ததாகிவிடுகின்றது. வசதிகளும் வாய்ப்புக்களும் ஒரு மனிதனைப் பண்படுத்திவிடாது மாறாக தடைகளும் சவால்களுமே மனிதனை பண்படுத்திவிடுகின்றது. நெடுந்தீவு மகேசின் "வாழ்வதற்குப் போராடு" அதனையே எமக்கு உணர்த்தி நிற்கின்றது. அவரது எழுதுகோல் தன் ஆக்க இலக்கியப் பணியைத் தொடர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நெடுந்தீவு மகேஷ் அவர்கள் கல்வியியலாளராக, சிறுகதையாளராக, கவிஞராக, கட்டுரையாளராக, சஞ்சிகை, பத்திரிகை ஆசிரியராக விளங்குபவர். ஆசிரியர்களுக்கான பயிற்சி அளிக்கும் வளவாளர்களில் சிறப்பான செயற்பாட்டாளராக விளங்குபவர். பல்துறை ஆளுமை மிக்க மகேஷ் அவர்களின் நேர்காணலை ஜீவநதி வாசகர்களுடன் பகிர்வதில் மகிழ்கிறோம்.



**நெடுந்தீவு மகேஷ்**
**சந்திப்பு - பரணீ**

**பரணீ :**

**நெடுந்தீவைச் சேர்ந்த உங்களது இளமைக்கால வாழ்வு பற்றிக் கூறுங்கள்?**

**நெடுந்தீவு மகேஷ் :**

நெடுந்தீவு எனது தாய்மண். அது கடலால் சூழப்பட்ட ஒரு கிராமம். எனது இளமைக் காலத்தில் எனது கிராமம் ஒரு தனித்திருந்த தீவாகவே எம்மால் பார்க்கப்பட்டது. போக்குவரத்து வசதிகள் குறைந்த கடலால் எல்லைப்படுத்தப்பட்ட சுதந்திர மான இடமாக அது காணப்பட்டது. அதன் சுற்றாட லுக்கும் சுவாத்தியத்திற்கும் ஏற்ப அங்கு வாழும் வாழ்வை ஏற்றுக் கொண்ட மக்களாகவே நாம் வாழ்ந்தோம்.

காவற்றுறை, கடற்படை, இராணுவம் எதுவுமே அன்று நெடுந்தீவில் இருந்ததில்லை. எமது கிராமம் ஒரு தனிப்பிரிவாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தொலைவிலே இருந்தமையால் பலரும் அறியாத தீவாக அது அன்று இருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லைக்குள் நெடுந்தீவு ஓர் அரசாங்க அதிபரின் மேற் பார்வைக்கு உட்பட்டு கிராமசேவகர் பிரிவுகளாக அன்றிருந்த கிழக்கு, மத்தி, மேற்கு ஆகிய பிரிவுகளில் மூவர் அரசாங்க அதிபருக்குக் கீழ் பணியாற்றி வந்தனர். அவற்றுடன் கல்வி சுகாதாரம் தபாற்சேவை என்பன சிறப்புற்றிருந்தன எனலாம்.

நான் எனது கல்வியை முழுமையாக நெடுந்தீவிலேயே பெற்றேன். 15 பாடசாலைகள் அன்றைய நாட்களில் இயங்கி வந்தன. இன்று அவை எட்டாகக் குறைந்து விட்டன.

பாடசாலைகளிலும் வீடுகளிலும் முழுமையாகத் தீவு முழுவதிலும் மின்சார வசதிகள் எதுவுமே இல்லாத நாட்களில் இரவு நேரங்களில வீட்டுக்கு வெளிச்சம்தரும் குப்பி விளக்கில் அன்று குப்புறப் படுத்திருந்து படித்தேன். மகாவித்தியாலய அதிபராக அன்றிருந்த அமரர் சீ.வீ.ஈ. நவரத்தின சிங்கம் எமது மாணவர்கள் தங்கிப் படிக்க வசதி யாகப் பாடசாலையில் மாலை வேளையில் பெற்றோ மக்ஸ் விளக்கின் வெளிச்சத்தை வழங்கி வசதிகள் செய்திருந்தார். அத்தகைய கற்கும் உதவிகள் அன்றைய அதிபரால் எமக்குக் கிடைத்தமை வரப்பிரசாதமே.

எங்கள் தீவு மிகவும் அழகானது. கடல் சூழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைகள் யாவுமே மணல் பரவிப் பரந்து சிறிய கற்கள், சிப்பிகள், சோகிகள் போன்றவை நிறைந்து காணப்படும். தீவெங்கும் பனை, தென்னை, பூவரசு போன்ற மரங்கள் செழித்து வளர்ந்து உவப்பூட்டும் மனதினிக்கும் வண்ணமாய்த் திகழும்.

எந்த வகையான மோட்டார் வாகனமும் எங்கள் தெருக்களில் ஓடாத காலம். மாட்டு வண்டிகளும், ஒரு சில மிதி வண்டிகளுமே எமது ஊரவரின் உள்ளூர்ப் போக்குவரத்துக்காக எமது மக்களின் பாவனையில் இருந்தன. ஊர்ப் பாட சாலைகளுக்குப் பிள்ளைகள் அநேகர் நடந்தே பயணித்தனர்.

எங்கு செல்வதாயினும் குறிப்பாகக் கோவில் களுக்கும், தமது வேலைகளுக்கான பகுதிகளுக்கும் நடந்தே பிரயாணம் செய்தனர். தூரமான இடங் களுக்கு மாட்டுவண்டிகளையே பலரும் பயன் படுத்தினர்.

தமிழர் மாத்திரமே வாழ்ந்துவரும் இத்தீவில் இறைபக்தி மிகுந்தோராய்க் கிறிஸ்தவர்களும், இந்துக்களும் இணைந்து வாழும் உறவைப் பெற்றிருந்தனர். தீவில் பேணப்பட்டுவரும் கோவில் களும், தேவாலயங்களும் பக்திச் சிந்தனையைப் பெருக்கித் தீவின் மக்களிடையே அன்பு, பாசம், கருணை ஆகிய நற்பண்புகளைக் கிராமம் எங்கணுமே பரவ விட்டிருந்தன.

கடல் சூழ்ந்த எனது கிராமம். மீன் பிடிக்குப் பிரபல்யம் வாய்ந்தது. கடற்குளிப்பும் நீச்சலும் எமக்குப் பரிச்சயமானது. சூள் கொழுத்தி மீன் பிடித்தல், ஆடு, மாடு, கோழிகள் வளர்த்தல், சிறு தோட்டங்களைச் செய்தல் என்பன எமது மக்கள் பயன்பெறும் பொழுது போக்கு வேலைகளாக இருந்தன. இவற்றிலே இணைந்து பெற்றோருக்கு உதவுதல் எமது இளமைக்கால இன்பங்களாக அமைந்தன.

பனம் பொருள் உற்பத்திகளின் பயன்கள் யாவற்றையும் பெற்று வாழ்ந்த எமது உறவுகளின் சிறப்பில் மகிழ்ந்திருந்தவன் நான். பனம் பழம், கிழங்கு ஒடியற் கூழ் முதற்கொண்டு பனாட்டு, ஒடியற்பிட்டு என்பவற்றை உண்டு சுவைத்துப் பலம் பெற்ற மக்களால் வளர்க்கப்பட்டவன் நான்.

தீவின் தெற்கு எல்லைப் பெரு வெளியில் சிறிய புதர்க் காடுகளும் புல்வெளிகளும் இருந்தன. பலவேளைகளில் ஓய்வுநாள்களில் தோழர்களுடன் அங்கெல்லாம் சென்று மகிழும் எமது பொழுது போக்குகள் எமக்கு உற்சாகம் தந்தன. விரிந்த வெல்லைப் புல்வெளிகளில் மேயும் குதிரைகள் அழகானவை அவற்றின் நடமாட்டத்தைப் பார்த்தும், அவை கூட்டமாகப் பாய்ந்து விரைந்து செல்லும் அழகை இரசித்தும் களிக்கும் எமது இளமைத் துடிப்பான கண்களுக்கு அவை உவப்பான காட்சிகளாக அமைந்தன..

எமது தீவில் வாழும் மக்களுக்குக் குடிப்ப தற்கு ஏற்ற நன்னீர் வசதிகள் மிகவும் குறை வெனினும் தீவின் மேற்கே இருக்கும் சாறாப்பிட்டி நன்னீர்க் கிணறுகளிலிருந்து நீரைப் பனை ஓலைப் பட்டைகளாலும் தகர வாளிகளாலும் அள்ளி எடுத்து பாத்திரங்களிலும், பீப்பா வண்டிகளிலும், மாட்டு வண்டிகளிலும் ஏற்றி மக்களுக்கு விநியோகித்தனர். அந்த நீரைப் பருகி வளர்ந்தவன் என்பதில் எனக்குள் ஓர் உற்சாகம் உண்டு.

மழைகாலங்களில் நெடுந்தீவை நாடிவரும் பறவைகளின் சிறகடிப்புகளையும் கூவிப் பறக்கும் பறவைகளின் பல்வகைக் குரலோசைகளையும் இரசிப்பதில் எமக்குப் பேரானந்தம்.

யாழ்ப்பாண நகரத்துக்கான பயணச்சேவை யில் ஊர்காவற்றுரையில் இருந்து நெடுந்தீவு வரையான படகுப் பயணத்தை மேற்கொள்ளும் வகையில் “சில்வர் ஸ்பிறே” என்ற மோட்டார்ப் படகு ஒன்றே சேவையில் இருந்தது. அந்த நாட்களில் அது நெடுந்தீவு மக்களின் பயணத்திற்காக நாளொன்றில் ஒரு சேவையை மாத்திரமே நடத்தி வந்தது

குறிகாட்டுவான் துறைமுகம் நெடுந்தீவு மக்களின் பயணப் பயன்பாட்டுக்காகத் திறக்கப் படும்வரை யாழ்ப்பாணம் சென்றுவந்த பிரயாணிகள் ஊர்காவற்றுறையினூடாகவே தமது போக்கு வரத்தை மேற்கொண்டனர். எனது இளமைக்காலம் இந்த நீண்ட பயணத்திலேயே பல கஸ்ரங்களை அனுபவித்தது. இன்று விரைவான கடற்பயணத்தில் குறிகாட்டுவான் துறைமுகம் குமுதினி, வடதாரகை போன்ற அரச படகுகளையும் கரிகணன், காளி அம்பாள் போன்ற தனியார் படகுகளையும் அணைத்துச் செல்லும் பாலமாக உதவி நிற்கிறது.

அநேக வசததிகளற்ற காலத்தில் தீவில் வாழ்ந்த எம்மைப் போன்ற பலரும், சுகமான வாழ்வையும், நீண்ட ஆயுளையும் பெற்றிருந்தனர் என்பது உண்மையே!

**பரணீ :**

**உங்கள் பெற்றார் உடன் பிறப்புகள் பாடசாலைக் கல்வி பற்றி அறியலாமா?**

**நெடுந்தீவு மகேஷ் :**

எனது பெற்றார் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர்கள். எனது தந்தையார் செல்லத்தம்பி. தாயார் நாகமுத்து. இவர்களின் இளைய மகனாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தேன். எனது அக்கா புஸ்பராணி காலமாகி விட்டார். எனது அண்ணர் திசைராசா. தற்பொழுது பிள்ளைகளுடன் அவுஸ்திரேலியாவில் வசிக்கிறார்.

எனது மனைவி வேதநாயகி ஓய்வுபெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியை. எனது மூத்த மகள் யா/சென் ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் உதவி அதிபராகக் கடமையாற்றுகிறார். எனது மூத்த மகன் பார்த்திபன் யா/வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகப் பணியாற்றியவர். அண்மையில் நாம் எதிர்பாரா வேளையில் கனடாவில் இரத்த அமுத்தப் பாதிப்பினால் காலமானார்.

இரண்டாவது மகன் பிரதீபன் வைத்தியர். யாழ்ப்பாணம் இரத்தவங்கியில் கடமையாற்று கிறார்.

எனது இரண்டாவது மகள் ஹேமமாலதி பிரான்ஸ் ரீ.ஆர்.ரீ றேடியோவில் அறிவிப்பாளராகக் கடமையாற்றுகிறார்

மூன்றாவது மகள் உமாபாரதி 2002இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத் தில் இரண்டாம் வருடம் முகாமைத்துவப் பட்டப் படிப்பைத் தொடர்ந்திருந்த வேளையில் எதிர் பாராத வகையில் இதய நோயாற் பாதிக்கப்பட்டுக் காலமானார்.

நான் எனது கல்வியை எனது சொந்த ஊரான நெடுந்தீவிலேயே மேற்கொண்டேன்.

ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், இடை நிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் கற்றுத் தேறினேன்.

ஓர் ஆசிரியனாக 1967இல் கேகாலை மாவட்டத்திலுள்ள மாலிபொட டபார் தமிழ் வித்தியாலயத்தில் நியமனம் பெறறேன். தொடர்ந்து ஆசிரிய பயிற்சியை யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் பெற்றுக் கொண்டேன்.

ஆசிரிய பயிற்சியின் பின்னர் கேகாலை மாவட்டப் பாடசாலையான தெகியோவிற்ற தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வி ஆசிரியரா கக் கற்பித்தலைத் தொடர்ந்தேன்.

அங்கிருந்து நெடுந்தீவு மேற்கு சைவப்பிர காச வித்தியாலயம், நெடுந்தீவு மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் நல்லூர் சி.சி.தமிழ் கலவன் பாட சாலை ஆகியவற்றிலும் கடமையாற்றினேன்.

நெடுந்தீவு கிழக்கு மாவிலித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றியவேளை 1990ஆம் வருடம் நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகராகக் கடமையேற்றேன்.

இடப் பெயர்வுகளால் பாடசாலைகள் பலவும் ஊர் விட்டு ஊர் நகர்ந்தும், அவற்றுள் சில இணைந்தும், தனித்தும் இயங்கும் நிலையில் ஒருசில பாடசாலைகள் சில இயங்காமற் போயின. 1995 ஆம் வருடம் நவம்பர் மாதம் யாழ்ப்பாண நகரமும் அதனைச் சூழ இருந்த கிராமங்கள் உள்ளடங்கிய யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் இராணுவ நடவடிக்கையால் அவதியுற்றது. அலை யலையாய் பெண்கள், பிள்ளைகள் அனைவருமே கையிலகப்பட்ட பொருட்களை எடுத்தபடி தெற்கு நோக்கி நகரத் தொடங்கினர். சாவகச்சேரி, வரணி, கொடிகாமம், பளைவரை ஊர்ந்தும், ஓடியும் திசைகடந்து நடந்து நானும் என குடும்பத்தினரோடு, கிளாலிக் கடல் கடந்து வன்னியைச் சேர்ந்து வவுனியாவை அடைந்தபோது எனக்கு வவுனியா மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் பதவியைத் தொடர அனுமதி தரப்பட்டது.

1996ஆம் வருடம் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அன்றிருந்த அமரர் சுந்தரம் டிவகலாலா அவர்களின் அழைப்பின் பேரில் மாகாணக் கல்வி அமைச்சில் தொடக்கப்பட்ட ஆரம்பக்கல்விக்கான ஆய்வுப் பிரிவில் ஓர் ஆலோச கராக நான் இணைக்கப்பட்டேன். அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவர்கள் எனக்கு ஆரம்பக் கல்விச் செயற் பாடுகளை ஊக்குவிப்பதற்கான அறிவுறுத்தல் களுடன் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப் பாளராக நியமனம் வழங்கினார். மாகாணங்களின் ஆரம்ப வகுப்பு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை பார்வையிட்டு மேம்படுத்தும் வழிவகைகளை ஆராய்ந்து மாணவரின் பாடசாலைக் கல்விக்கு ஊக்கம் தரும் பணியை நான் மேற்கொண்டேன். ஓய்வு பெறும்வரை பொத்துவில் தொடங்கிப் பொலிகண்டி வரையான வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டேன். அந்தப் பணியின் ஊடாக என்னைப் பலரும் அறிந்து கொண்டு என்னைப் பாராட்ட வாய்ப்பு அமைந்தமை எனது அதிஸ்டமே.

அரச கடமைகளிலிருந்து நான் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து GTZ என அழைக்கப்பட்ட ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுழைப்பகத்தின் ஆரம்பகல்வி நிபுணத்துவ ஆலோசகராக நியமனம் பெற்று 4 வருடங்கள் கடமையாற்றினேன்

பின்னர் இன்றுவரை அமரர் சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திவகலாலா அவர்களால் நிறுவப்பட்ட ஆறுதல் நிறுவனத்தில் இணைந்து ஆரம்பக் கல்வி சார்ந்த நிபுணத்துவ ஆலோசகராகப் பணி தொடர்கிறேன்

**பரணி :**

**நெடுந்தீவின் சிறப்புகள் என நீங்கள் கருதுபவை?**

**நெடுந்தீவு மகேஷ் :**

நெடுந்தீவு யாழ்பாணத்திலிருந்து நீண்ட தூரத்தில் அமைந்துள்ள பெரிய தீவு என்பது ஒரு சிறப்பான அம்சமாகும்.

இங்கே வரலாற்று முக்கியம் பெற்ற புராதன ஒல்லாந்தர் கோட்டையும் வெடியரசன் எனப் பாராட்டப்பெறும் அரசன் மேற்குக் கரையோரமாக அமைத்த கோட்டையின் சிதைவுகளும் காணப்படுகின்றன.

குயிந்தா எனப் பெயர் குறித்துக் குயின்ரவர் எனப் பார்க்கப்படும் வெளிச்சவீடான அழகிய புராதன கட்டட அமைப்பொன்று தென்கிழக்குக் கரையோரத்தில் உயர்ந்து காணப்படுகிறது.

குதிரைகள் நிறைந்த தெற்குப் புல்வெளிகளில் குதிரைகளின் நடமாட்டம் மக்களின் மனங்கவரும் காட்சியாக அமைந்திருக்கும்.

ஒல்லாந்தரால் நாட்டப்பட்டு இன்று பருத்து, ஓரிருவர் உள்நுழைந்து நிற்கும் வகையில் குகை பொன்ற அமைப்புடன் காட்சி தரும் ஒரு பெருக்கு மரம் தீவின் கிழக்கே வளர்ந்துள்ளது.

நாற்பது அடி மனிதன் நடந்த அடையாளமாகக் கூறப்படும் நீண்ட பாதச்சுவடு பதிந்த ஒரு கல்லடையாளம் நெடுந்தீவு மேற்கே அமைந்துள்ளது.

நெடுந்தீவு கிழக்கு முருகன் கோவிலின் தென் மேற்கு முன்றலில் நிலப்பரப்பிலிருந்து மேல் நோக்கி வளரும் முருகைக்கல் ஒன்று உள்ளது. அது நாளுக்குநாள் வளர்ந்து வரும் நிலை அவதானிக்கப்படுகிறது.


இவை தவிர அழகிய கடற்கரை, சோலைகள் நிறைந்த வாழிடங்கள் பறவைகள் பாடித்திரியும் குளக்கரைகள், மந்தைகள் மேயும் புல்வெளிகள் எனப் பலவும் இங்குள்ளன.

**பரணி :**

**இலக்கிய உலகிற்குள் காலடி எடுத்து வைக்கக் காரணமாக அமைந்தவர் பற்றிக் கூறுங்கள்.**

**நெடுந்தீவு மகேஷ் :**

நான் பள்ளியில் படிக்கும் காலத்தில் எனக்குத் தமிழ் கற்பித்த எனது தமிழ் ஆசிரியர்களே



என்னை இலக்கிய ஆக்கங்களை எழுதத் தூண்டினார்கள். குறிப்பாக நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் எனக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர் அமரர் இராசரத்தினம் என்றும் என் நினைவில் உள்ளார். கவிதை எழுத என்னைத் தூண்டியவைகளில் முதன்மை பெறுவது அவர் எமக்குத் தமிழ் கற்பிக்கும் அழகெனலாம். அன்றைய நாள்களில் அவர் எமக்குக் கற்பித்த இலக்கிய பாடம் "கும்பகர்ணன் வதைப்படலம்" கம்பன் படைத்த கவிநயம் செறிந்த செய்யுள்களைக் கொண்டது. அவற்றை ஓசை இனிக்கும் வகையில் உரைத்துக் கற்பித்த உன்னதம் என்னைக் கவிதை எழுதத் தூண்டியது.

தொடர்ந்து நான் கவிதைகளைப் பத்திரிகைகளில் வெளியிட முற்பட்டபோது அதற்கு ஆதரவு தந்து என்னை ஊக்குவித்தவர்களில் முதன்மை பெறுபவர் அந்நாள் ஈழநாடு வாரமலர் ஆசிரியர் "சசிபாரதி" என அழைக்கப்பட்ட அமரர் சபாரத்தினம். இவரது ஒத்துழைப்பால் முதலாவது சிறுவர் கவிதை "சிங்காரச் சிட்டு" ஈழநாடு வாரமலரில் வெளிவந்தது.

இந்துக் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய அமரர் காத்திகேசு அவர்களின் இடதுசாரி சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு தேசாபிமானி, தொழிலாளி பத்திரிகைகளில் நான் எழுதி வெளிவந்த கவிதைகளைப் படித்து எனக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்த இடதுசாரிச் செயற்பாட்டாளர் அமரர் கே.ஏ.சுப்பிரமணியம் மறக்கப்பட இயலாதவர்.

தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளின் அந்நாள் ஆசிரியராகத் திகழ்ந்த அமரர் எஸ்.டீ.சிவநாயகம் எனது கவிதைகளின் தரம் கண்டு பிரசுரித்து ஊக்குவித்தவர். அவர் என் நினைவில் அழியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பிடித்த பத்திரிகையாளர்.

இவர்களுடன் என் நண்பரும் எனது முதலாவது கவிதை நூல் வெளிவர ஊக்குவித்த முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திரு என். அனந்தராஜா அவர் களும் அன்புடன் என் நினைவில் நிலைத்திருப்பவ ராவார்.

சிறுகதை இலக்கியப் பரப்பிற்குள் எனது காலடியை வைக்கத் தூண்டிய "தினபதி தினம் ஒரு கதைக் களம்" நான் முதன்முதல் எழுதிய "ஊமை" என்ற சிறுகதையை வெளியிட்டு வைத்தது. இக்கதையை பார்வையிட்டுப் பத்திரிகையில் வெளி வரத் தகுதிபெறச் சிபார்சு செய்தவர் அமரர் தாளையடி சபாரத்தினம் அவர்கள். மறக்க இயலாத பண்புடையவர். அவரின் கருத்துரைகள், திருத்தங்கள் பல சந்தர்ப்பங்களில் எனது சிறுகதை எழுதும் ஆர்வத்திற்கு நிறையவே பயன் தந்தன.

தொடர்ந்து பத்திரிகைகளிலும், சஞ்சிகை களிலும் சிறுகதைகளை எழுதிப் பிரசுரிக்க ஆர்வமூட்டியவர்களில் அந்நாள் "சுடரொளி" ஆசிரியர் வித்தியாதரன், இன்றைய "செம்மண்" ஆசிரியர் பிரேமானந் ஆகியோர் எனது நன்றிக் குரியவர்கள்.

**பரணீ :**

**முதற்படைப்பு வெளியான ஊடகம் ?**

**நெடுந்தீவு மகேஷ் :**

வாரப் பத்திரிகையான ஈழநாடு "சிங்காரச் சிட்டு" என்ற எனது முதலாவது கவிதையை வெளியிட்டது.

தினபதி தினசரி பத்திரிகை, "தினம் ஒரு கதைக்களம்" பகுதியில் "ஊமை" என்ற எனது முதலாவது சிறுகதையை வெளியிட்டது.

**பரணீ :**

**தங்களுடைய சிறுகதைகளுக்கான கருவை எவ்வாறு தேர்வு செய்கிறீர்கள் ?**

**நெடுந்தீவு மகேஷ் :**

எமது வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பங் ளிலும் என்னைச் சிந்திக்கத் தூண்டும் நிகழ்வுகள்; நாம் சந்திக்கும் மனிதர்கள், அவர்தம் செயற் பாடுகள் ஒவ்வொன்றும் எனது கதைக்கருக்களாக தேர்வு பெற்றுள்ளன. எம்மைச் சூழ்ந்திருக்கும் இயற்கையின் அசைவுகளும் அவற்றின் மேல் நாம் பதிக்கும் பார்வைகளும், நாம் மேற்கொள்ளும் செயல்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பிறக்கும் கருத்துக்களும் எமக்குப் பலநிலைகளில் எழுதத் தூண்டும் விடயங்களாகின்றன.

அவை சிறுகதைகளாகும்போது வாசகரைச் சிந்திக்க வைக்கும், இரசித்து வாசிக்கத் தூண்டும் வாழ்வின் சிறப்புக்குரிய பாடங்களாய் அமைவன எவையோ அவற்றைத் தேர்ந்து எழுதுவதிலேயே நான் எனது கவனத்தைச் செலுத்துகிறேன். அப்பொழுதுதான் எனது எழுத்து எனக்குத் திருப்தி தருவதாகவும் நான் உணருகிறேன்.

**பரணீ :**

**உங்களுடைய சிறுகதைத் தொகுப்புகள் பற்றிக் கூறுங்கள்?**

**நெடுந்தீவு மகேஷ் :**

எனது முதலாவது சிறுகதைத் தொகுதி எங்கள் கல்வி உலகத்தைச் சுற்றிப் படர்ந்த சிறுகதைகளாகவே அமைந்தன. "தாரணி ஓர் ஆச்சரியக்குறி!" என்ற தொகுதியில் இடம்பெறும் முதலாவது கதையின் பெயரையே நூலின் தலைப்பாக இட்டுள்ளேன்.

இந்தக் கதையைச் சொல்லும் எனது நோக்கத்தில் நிறையவே தேவை இருப்பதாக நான் உணர்ந்தேன். கணிதபாடத்தை மாணவர் பலரும் கற்பதில் ஆர்வம் காட்டாமைக்கான காரணத்தை அறிந்து அதனைக் களையும் ஆர்வத்தினால் எழுதப்பட்டதே இந்தக் கதை. மாணவரின் சிந்தனை யும், ஆசிரியரின் கற்பித்தல் முறையில் ஏற்படும் முரண்பாடுகளும் பல வேளைகளில் மாணவரிடத் தில் கணித பாடத்தில் வெறுப்பேற்படுத்துவதை அவதானித்ததன் விளைவே இது.

ஆசிரியர்களுக்கென வெளிவந்த மாத சஞ்சிகையான "அகவிழி". இக்கதையை வெளி யிட்ட பொழுது கிழக்கு மாகாண அதிபர் ஒருவர் இக்கதை குறித்து எழுதிய குறிப்புகள் என்னை மிகவும் கவர்ந்தன. கணிதம் என்றால் என்ன? என்பதனைப் புரிந்து கொள்ளாமல் சில வாய்பாடு களையும் கணிதச் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்துக் கற்பித்தலை நிகழ்த்திக் கணித பாடத்தை மாணவர் சித்தியடையச் செய்வதையே பாடசாலைகள் மேற்கொள்ளுகின்றன. கணிதம் வாழ்க்கையோடு இணைந்தது. அதுவே பல நிலை களில் வாழ்க்கையாகிறது என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளும்போது கணிதம் கற்பது இலகுவா கிறது என்பதைக் கதை குறிப்பாக உணர்த்தி நிற்கிறது. ஆசிரியர் மாணவருடன் இணைந்து கற்பித்தலை தொடர்வதே சிறந்தது. பாடங்கள் பரீட்சைக்கானவை மாத்திரமல்ல வாழ்க்கைக் கானவை என்பதை மாணவர் உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும்போது கற்றல் இலகுவாகிறது என்பதை கதை உணர்த்துவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இத்தொகுதியிலுள்ள "ஆசிரியர் கற்கிறார்" என்ற சிறுகதையானது கல்வியியற் கல்லூரிகளில் ஆரம்பக் கல்விப் பாடநெறியைக் கற்கும் மாணவர்களின் தமிழ்மொழிப் பாட மேலதிக வாசிப்பு நூலில் இடம்பெற்றுள்ளது.

ஆசிரிய உலகம் தேடிக் கற்க வேண்டிய நூலாக அதனைக் கருதி ஆறுதல் நிறுவனம் "தாரணி ஓர் ஆச்சரியக்குறி" என்ற நூலை வெளியிட்டு வைத்தமை குறித்துப் பெருமையடைகிறேன்.

எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி "வாழ்வதற்குப் போராடு" எனும் நூலாகும். இதன் தலைப்பு பல வேளைகளில் போராட்டம் சார்ந்தது எனக் கருதுவோரும் உளர். ஆனால் தற்கொலைக்குத் தூண்டும் காரணிகளைப் புறந்தள்ளிப் போராடும் ஒருவரே இந்தத் தலைப்பிட்ட கதையின் கதாபாத்திரமாக உருவகிக்கப்பட்டுள்ளார். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் அவ்வப்போது வெளிவந்த எனது சிறுகதைகளின் தொகுப்பு இது.

"நான் பிறவாதிருந்திருந்தால்" இது எனது மூன்றாவது சிறுகதைத் தொகுதி. நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதி வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பே இதுவாகும். போர்க்கால நிகழ்வுகளில் என்னை எழுதத் தூண்டியவையும் அதற்கு முன்னரும் பின்னருமான சந்தர்ப்பங்களில் என்னால் அவதானிக்கப்பட்டவை பலவும் கதைகளின் கருப் பொருளாய் அமைந்துள்ளன.

இவற்றுக்கு வாசகர்கள் தரும் வாசிப்பு அக்கறையும், அவதானமும் மேலும் சிறுகதை நூல்களை வெளியிட ஆர்வம் தரும் என நம்புகிறேன்.

**பரணீ :**

**சிறுகதைகளோடு கவிதைகளையும் எழுதி வருகிறீர்கள் அந்த வகையில் உங்கள் மனிதத்தைத் தேடி எனும் கவிதைத் தொகுதி பற்றிக் கூறுங்கள்.**

**நெடுந்தீவு மகேஷ் :**

மனிதத்தைத் தேடி என்பது எனது முதலாவது கவிதைத் தொகுதியாகும். இதற்கு 2003ஆம் வருடம் வடக்கு கிழக்கு மாகாணக் கலாசார அமைச்சின் இலக்கிய நூலுக்கான விருது கிடைத்தது.

இந்நூல் 1960ஆம் வருடம் தொடக்கம் ஈழத்தில் வெளிவருகின்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றிலும் வெளிவந்த எனது கவிதைகளின் தொகுதியாகும். இத்தொகுப்பில் அநேகமானவை மரபுக்கவிதைகளாகும். புதுக் கவிதைகளில் அதிக ஆர்வம் காட்டாதிருப்பினும் புதுக் கவிதை யுகமாக மாறியுள்ள இன்றைய இலக்கிய பாரம்பரியத்தில் நானும் இணைய முயன்றுள்ளேன் என்பதற்கு அடையாளமாக இத் தொகுதியில் புதுக்கவிதைகளும் சேர்க்கப் பட்டுள்ளன.



மகிழ்வு தந்த எனது வெளியீடுகளில் முதன்மை பெறும் நூல் இது.

**பரணீ :**

**உதயன் பத்திரிகையில் பணியாற்றிய அனுபவங்கள் பற்றிப் பகிருங்கள்.**

**நெடுந்தீவு மகேஷ் :**

அது ஓர் எதிர்பாராத நியமனம். உதயன் பத்திரிகைக் குழுமத்தின் தலைவர் மதிப்புயர் திரு. ஈ. சரவணபவன் அவர்கள் என்னை அழைத்துத் தற்காலிகமாக நிறவனத்தின் முகாமையாளராகப் பணியேற்கும்படி கேட்டிருந்தார். எழுத்துத் துறையில் எனக்கு ஏற்பட்டிருந்த விருப்பு, முகாமையாளராகப் பணி தொடர்வதில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் ஒரு முன்னணிப் பத்திரிகை எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அறியும் சந்தர்ப்பத்தை அது எனக்கு வழங்கியிருந்தது.

பத்திரிகைக் காரியாலயத்தில் பணியாற்றுவோரிடையேயான தேவைகள் அவர்களுக்கிடையே பேணப்பட வேண்டிய சுமுகமான உறவு என்பவற்றின் மீதான தெளிவைப் பெற இது வாய்ப்பளித்தது தினசரி வெளிவரும் பத்திரிகைச் செய்திகளின் உண்மைத் தன்மை, பத்திரிகைகளுக்கு இடையேயான போட்டிகள் என்பவை ஒரு முகாமையாளரின் முன் எழுப்பும் வினாக்களுக்கு விடை காண்பது மிகவும் சிரமமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை அதிகாலையில் நான் எனது அலுவலகத்திற்குள் நுழையும் முன்னதாகவே எனக்காகக் காத்திருந்த ஒருவர் சிறிது சத்தமாக, "பொய்யான செய்திகளை பேப்பரில் போட்டு எங்களின் நற்பெயருக்குப் பங்கம் விளைவிக் கிறீர்கள். நீங்கள் இப்படிச் செய்வது நியாய மில்லை" எனக் கூச்சலிட்டார். நான் அவரை அழைத்து என்ன பிரச்சினை என்பதைத் தெளிவாகச் சொல்லுங்கள் என்றேன்.

அவர் அரசாங்க அலுவலகம் ஒன்றில் குத்தகைக்குக் கன்ரீன் ஒன்றை நடத்தி வருபவர். அவரது கன்ரீனில் இருக்கும் விற்பனைப் பொருட் கள் எல்லாமே குறித்த விலைக்கும் அதிகமான விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன என்ப தாகச் செய்தி வெளிவந்த அன்றைய பத்திரிகைத் தாளை அவர் எனக்குக் காண்பித்தார்.

அத்துடன் அந்தச் செய்தி தவறானதெனவும் அதனை எமது பத்திரிகை தவறாகப் பிரசுரித்து விட்டதாகவும், கூறி அச்செய்திக்கு மறுப்புத் தெரிவித்து நாளைய செய்தித் தாளில் மீண்டும் செய்தியைத் திருத்திப் பிரசுரிக்க வேண்டும் எனவும் கேட்டு அடம் பிடித்தார்.

நான், எமது பத்ததிக்காக நிருபர்களால் எமக்குக் கிடைக்கும் எந்தச் செய்தியையும் உண்மையென உறுதி செய்த பின்னரே பிரசுரித்து வெளியிடுவோம். "இது என்னுடைய வேலை இல்லை, இதை நான் எங்கள் பத்திரிகையின் செய்திப் பிரிவுக்குத் தெரிவிக்க வேண்டும், எதற்கும் நீங்கள் உங்களின் முறைப்பாட்டை எழுத்தித் தந்தீர்களானால் அதனை எனது செய்திப்பிரிவுக்கு அனுப்பி உரிய பதிலை உங்களுக்குப் பெற்றுத் தரலாம்" என்றேன்.

அதற்கு அவர், "நான் சொல்லுகிறேன். அதனை நீங்கள் எழுதி செய்தி ஆசிரியருக்குக் கொடுங்கள்" என்றார். எனக்குச் சற்றுக் கோபம் வந்தாலும் நிதானமாக, "இது என்னுடைய வேலை இல்லை. நான் உங்களுக்கு வேண்டுமாயின் பேப்பரும் பேனாவும் தருகிறேன். எதிர் அறையி லிருந்து எழுதி என்னிடம் தந்துவிட்டுச் செல்லுங் கள்" என்றேன். அவசரமாக அவற்றை வாங்கியவர் எதிர் அறையில் சிறிது நேரம் இருந்ததை அவ தானித்தேன். பின்னர் அவர் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே பேப்பரையும் பேனாவையும் அந்த அறை மேசையில் கைவிட்டு அங்கிருந்து போய் விட்டார். பின்னர் நான் அறிந்தபடி அவருக்குத் தனது பிரச்சனையைத் தெளிவுபடுத்திக் கடிதம் எழுதத் தெரியாது என்பதை அறிந்தேன்.

இவை போன்று முகாமையாளர் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம். முகாமையாளர் பதவியிலிருந்து நான் பத்திரிகை ஆசிரிய குழுவில் இணைந்தபோது மனம் மகிழ்ந்தது. எழுத்தாள நண்பர்கள் பலரைச் சந்தித்தேன். மகிழ்வான தருணங்கள் நிறைவாகவே கிடைத்தன.

**பரணீ :**

**நீங்கள் ஒரு கல்வியியலாளராகவும் விளங்குபவர் என்ற வகையில் உங்கள் கல்வித்துறை அனுபவங்கள் பதவிகள் பற்றிக் கூறுங்கள்.**

**நெடுந்தீவு மகேஷ் :**

ஆசிரியராகப் பணியைத் தொடர்ந்து, படிப்படியாக அனுபவத்தினூடான எனது வளர்ச்சி ஆசிரிய ஆலோசகராகவும், அதிபராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் என்னை உயர்த்தியது.

அன்றைய நாட்களில் என்னோடு கடமைகளில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் யாவருமே எனக்கு வழிகாட்டிகளாக அமைந்திருந்தார்கள். கற்றதன் வழி ஒழுகுதல் அவசியம் என்பதை உணர்த்திய பலர் அன்றிருந்தார்கள் என்பது எனது பணிக்காலத்தில் எனக்குப் பெருமை சேர்த்தது எனலாம்.

காலம் எனக்களித்த பதவிகளை நான் நேர்மையான கடமைகளின் மூலம் நிறைவேற்றி யுள்ளேன் என்பதில் நிறையவே திருப்தியுடையேன்.

**பரணீ :**

**யாழ்ப்பாணத்தின் இன்றைய கல்விநிலை எவ்வாறு உள்ளது?**

**நெடுந்தீவு மகேஷ் :**

கற்பதும், பரீட்சை எழுதுவதும், சான்றிதழ் கள் பட்டங்கள் பெறுவதுமே கல்வியின் பெறுபேறு கள் எனக் கருதுவோர் பலர் மலிந்துவிட்ட நிலையில் யாழ்ப்பாணக் கல்வியின் வாழ்நிலை வழிதவறிச் செல்வதாக அவதானிக்க முடிகிறது.

ஒவ்வொருவரினதும் கல்வித்தரத்தை அறியவும், பட்டங்களைப் பெறவும் பரீட்சைகள் நடைபெறுகின்றன. இவை தவிர உயர் பதவியைப் பெறவும், தொழிற் தேவையைக் கருதி ஆட்களைத் தெரிவு செய்யவும் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அதன் மதிப்பீட்டு முடிவுகளின்படி சிலபேர் தெரிவாகப் பலரும் தரமிறக்கப்படுவதாக அவதானிக்கப்படுகிறது. அனுபவம் மிக்கவர்களான அதிபர்கள் தோன்றி வளரும் நிலையில் பரீட்சைச் சித்தியை முதன்மைப்படுத்தித் தேர்வாகும் அதிபரிடமிருந்து பலரின் எதிர்பார்ப்பாக இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிப்பண்புகள் சிதைந்து போயிருப்பதை அவதானிக்கலாம். அவ்வாறே கல்விப் பணிப்பாளர் பதவி உயர்வுகளுக்கும் பொதுப் பரீட்சைகளின் முடிவுகள் மாத்திரம் போதுமானவை அல்ல.

ஒவ்வொருவரதும் அனுபவத் திரட்சி அவதானிக்கப்பட வேண்டும். இவ்வாறின்மை காரணமாக ஆளுமையற்றோர் தமக்குக் கிடைக்கும் பதவிகளில் அர்த்தமின்றி ஆட்டம் போடுகிறார்கள்.

எமது கல்வித்திட்டம் குறித்த எல்லைப் படுத்தப்பட்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கியதாக உள்ளதுடன் அவை எழுத்துப் பரீட்சைகளின் மூலம் மாத்திரமே மதிப்பீடு செய்யப்படுகின்றன. எழுதத் தெரிந்தவன் அதன்வழி செயற்படுந் தகுதியைக் கொண்டவனாக இருப்பான் என்ற கணிப்பீடு பொருத்தமானதா? என்பதைச் சிந்தித்தல் பயனுடையதாகும்.

"பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை" என்ற முதுமொழிக்குப் பொருந்தவே இன்றைய கல்விப் புலத்தில் பதவிகளில் இருப்பதாக கல்வியின் வளர்நிலை அவதானிக்கப்படுகிறது. பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தலால் வினாக்களுக்கு விடையளிக்கும் பயிற்சிகளே பாடசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளாக அமைந்துவிடுகின்றன.


போட்டி மனப்பாங்கை வளர்த்து நட்பைக் குலைத்துவிடும் பணிகளுக்கே இப் பரீட்சை முறை உதவுகிறது. பாடசாலையில் கற்ற கல்வி வாழ்க்கைக்கு உதவுவதிலிருந்து தவறியும் விடுகிறது.

கல்வித் திட்டத்தில் மாற்றங்கள் தேவை எனச் சொல்லப்பட்டாலும் பொருத்தமான அதிகாரிகள் நியமனம் பெறுவதிலும் அவதானம் தேவை.

நமது மாணவர்களின் பரீட்சைச் சித்திகள் அதிகரிக்கலாம். ஆனால் வாழும் முறையில் மாற்றம் விளங்கப் பலவழிகளிலும் ஆய்வுகளின் மூலம் முதல்நிலை கண்டறியப்பட்டு திருத்தம் பெற்ற செயல் வடிவம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**பரணீ :**

**விளக்கு சஞ்சிகை ஆசிரியராக இருந்த அனுபவங்களை அறியலாமா?**



**நெடுந்தீவு மகேஷ் :**

யாழ்ப்பாண மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் கல்வி அபிவிருத்திக் கழகம் வெளியிட்ட "விளக்கு" சஞ்சிகை ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் திறன்களை மேம்படுத்தும் இலட்சியத்தோடு தொடக்கப்பட்ட முதன்மைச் சஞ்சிகையாகும். ஆசிரியவாண்மை விருத்திச் சஞ்சிகையான இதன் ஆசிரியராக கல்வியியலாளரும் சிறந்த எழுத்தாளருமான "சிற்பி" எனப் பெயர் பெற்ற சரவணபவன் அவர்கள் பொறுப் பேற்றிருந்தார். அதனைத் தொடர்ந்து இதழாசிரியர் என்ற வகையில் பலரும் சஞ்சிகையை மாதாந்தம் பொறுப்பேற்று வெளியிட்டனர்

நான் இறுதியாக நிரந்தர இதழாசிரியர் என்ற வகையில் சஞ்சிகையைப் பொறுப்பேற்று பதினைந்துக்கும் மேலான மாதங்கள் ஆசிரிய பொறுப்பை சிறப்பாகச் செய்ய முயன்றிருந்தேன். எனது பணிச் சிறப்புக்குக் காரணராக அன்றிருந்த கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களின் ஒத்துழைப்பு மேலானதாகும். போர்ச் சூழல் நிலவிய அன்றைய நாள்களில் பாடசாலைகளையும், அதன் நிர்வாக அலகுகளையும் நல்வழி நடத்திச் செல்ல வழிகாட்டுவதே இச்சஞ்சிகையின் பிரதான இலட்சியமாக இருந்தது. ஆசிரியவாண்மை விருத்தியுடன் அவர்களின் இலக்கியப் படைப்புகளுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றைச் சஞ்சிகையில் பிரசுரித்து அவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்தவும் சஞ்சிகை இடமளித்தது. கட்டுரை, கவிதை, சிறுகதைகள் என்பவற்றுடன் முன்னணி ஆசிரியர்கள், அதிபர்கள், அலுவலர்கள் ஆகியோரின் கருத்துக்கள் வெளிப்படும் வகைதேர்ந்த நேர்காணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் சஞ்சிகை இடம் தந்திருந்தது. எழுத்தாக்கப் போட்டிகளை நடத்திக் கல்விப்புலத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை பாராட்டுக்குரியதாகும்.

இது கல்விப்புலத்தில் பலரினதும் உயர்வான மாற்றத்துக்கு உதவியதுடன், ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு வழிகாட்டிய ஒரு கருவியாகவும் அறியப்பட்டதெனலாம்.

**பரணீ :**

**அர்ச்சுனா சிறுவர் சஞ்சிகை வரவில் உங்கள் பங்கு? வேறு சஞ்சிகைளில் பணியாற்றினீர்களா?**

**நெடுந்தீவு மகேஷ் :**

உதயன் வெளியீட்டகத்தின் சிறுவர் மாத சஞ்சிகையான அர்ச்சுனா ஆரம்பித்த காலத்திலிருந்து பலமாதங்கள் சிறப்பாக வெளிவந்திருந்தமை அறியப்பட்டிருந்த நிலையில் சில காலங்கள் வெளியிடும் வாய்ப்புகளை இழந்து தடைப்பட்டிருந்தது. அதனை மீண்டும் தொடக்கி அச்சிட்டு வெளியிட்ட போது ஆதரவு நிறையவே காணப்பட்டது. ஆரம்ப வகுப்புகளைக் கொண்ட முன்னணிப் பாடசாலைகள் அதனை விரும்பி வரவேற்றன. இருந்தும் அரச பரீட்சையை நோக்காகக் கொண்ட வாசிப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையால் மேலதிக வாசிப்பில் மாணவர் ஈடுபடுவது குறைவாகவே காணப்பட்டது. அதனால் அதனைத் தொடர்ந்து வெளியிடுவதில் சிரமங்கள் ஏற்பட்டன.

வெளிவந்த அர்ச்சுனா சிறுவர் சஞ்சிகைகள் யாவும் சிறுவரை ஈடுபாட்டுடன் செயற்படத் தூண்டிய சிறப்பான இலக்கிய ஆர்வத்திற்குத் தீனியிட்டதெனல்ாம்.

அர்ச்சுனாவைத் தொடர்ந்து ஆறுதல் நிறுவனம் வெளியிட்ட "ஆறுதல்" உதயன் வெளியீடான "சுடரொளி" ஆகியவற்றின் இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளேன்.

**பரணீ :**

**ஈழத்தில் சிறுவர் சஞ்சிகைகள் தொடர்ச்சியாக வெளிவராமைக்கு உரிய காரணங்களாக நீங்கள் கருதுபவை?**

**நெடுந்தீவு மகேஷ் :**

பாடசாலைகள் பரீட்சையை நோக்காகக் கொண்ட கல்வியை வழங்கி வருதலால் மேலதிக வாசிப்பை ஊக்குவிக்கும் பண்பை இழந்துவிட்டன. வாசிப்பை ஊக்குவிக்கும் வகை தேர்ந்த உத்திகளைக் கண்டறிய ஆய்வுகள் மேற்கொள்வது அவசியமாகும். சிறுவர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்குவதுடன் அவர்கள் ஈடுபடும் அல்லது அவர்களை ஈடுபடுத்தும் எழுத்தாக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கிச் சிறுவர் சஞ்சிகையில் பிரசுரித்தல், நிழற்படங்களைப் பிரசுரித்தல் எனப் பலவும் சிறுவரை ஊக்கப்படுத்தலாம். சிறுவர்தம் பார்வைக்குக் கவர்ச்சியான விடயங்களைப் பிரசுரித்தல், சிறுவரின் தேடல்களுக்கு பதில் தரும் வகையில் சிறுவர் வாசிக்கும் விடயங்களைக் கொண்டவையாக வெளியாகும் சஞ்சிகையைச் சிறுவர் விரும்பி வாசிக்க முன்வருவர். எனவே சிறுவர்களை ஈர்க்கும் வகையில் சஞ்சிகைகளின் உள்ளடக்கம் அமைவது சிறப்பாகும்.

சிறுவர் வாசிப்புக் கழகங்கள் அமைத்தல். சஞ்சிகைகள் பற்றிய சிறுவரின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்றவற்றில் கவனம் செலுத்துதல் பயன்தரும் முயற்சிகள் எனலாம்.

**பரணீ :**

**தாங்கள் பெற்ற பட்டங்கள், கௌரவங்கள்?**

**நெடுந்தீவு மகேஷ் :**

வடமாகாணசபை முதலமைச்சரின் விருது, யாழ்மாவட்ட யாழ்முத்து விருது, இலங்கை அரசின் இலக்கியத்திற்கான கலாபூஷண விருது, பிரான்ஸ் சர்வதேச வானொலியின் இருபத்தேழாம் வருட நிறைவில் வழங்கிய கௌரவ இலக்கிய விருது, மனிதத்தைத் தேடி எனும் கவிதை நூலுக்கு மாகாண அமைச்சு வழங்கிய நூல் விருது, நெடுந்தீவு பிரதேச சபை வழங்கிய மூத்த இலக்கிய கர்த்தாக்களுக்கான விருது, தினபதி, சிந்தாமணி, ஞானம், உதயன் ஆகியவை நடாத்திய சிறுகதை, கவிதைப் போட்டிகளில் பெற்ற பரிசுகள் என்னைக் கௌரவித்தன.

**பரணீ :**

**நீங்கள் எழுதிய தொடர்கள் பத்திகள் பற்றிக் கூறுங்கள்?**

**நெடுந்தீவு மகேஷ் :**

உதயன் வாரமலரில் அரசியல், சமூக மாற்றங்களை நோக்கி எழுதப்பட்ட "சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி" என்ற பத்தி எழுத்துக்களின் தொடர், சுடரொளி வார இதழ் தொடர்ச்சியான "தொலையா நினைவுகள்" என்ற வாழ்வில் நிகழ்கின்ற மனதைத் தொட்ட சம்பவங்களை பத்தி எழுத்துக்களாகப் பிரசுரித்தமை. விளக்கு சஞ்சிகை வெளியிட்ட கல்விச் சிந்தனையாளர்களின் கட்டுரைத் தொடர்களை உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சஞ்சிகையில் தொடராக எழுதியமை.

**பரணி :**

**இலக்கியத்திற்கு அப்பால் உங்கள் பிற செயற்பாடு**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

**நெடுந்தீவு மகேஷ் :**

நாடகம், இசை, கல்விசார் கற்றல், கற்பித்தல் தொடர்பான ஆசிரியர்களுக்கான சேவைக் ஸ்ரீகால செயலமர்வுகளை நடத்தியமை, ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுழைப்பகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட பரிகாரக் கற்பித்தல், மகிழ்ச்சிகரமான கற்றல் என்பன தொடர்பில் ஆசிரியர்களுக்கான வழிகாட்டிகள் தயாரித்தமை, செயலமர்வுகள் நடாத்தியமை, பொம்மலாட்டம், நாடகம் ஆகிய துறைசார் செயற்பாடுகளில் வடக்கு, கிழக்கு மாகாண பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கியமை. "ஆறுதல்" நிறுவனத்தின் ஆரம்பக் கல்வி ஆய்வுகளில் ஈடுபட்டு விசேட ஆலோசகராகப் பணியாற்றியமை, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, ஹொலன்ட், டென்மார்க் ஆகிய நாடுகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களின் அழைப்பின் பேரில் அவ்விடங்களுக்கு சென்று ஆசிரியர்களுக்கான கற்றல், கற்பித்தல் வழி காட்டல்களை மேற்கொண்டமை.

**பரணி :**

**பத்திரிகையாளராகவும் சஞ்சிகையாளராகவும் இருந்துள்ளீர்கள். இதில் கடினமான பணி?**

**நெடுந்தீவு மகேஷ் :**

இரண்டுமே கடினமான பணிகள். பத்திரிகை தினசரி அல்லது வார நாட்களுக்கான விடயங்களைக் கொண்டு வெளிவருகின்றன. சஞ்சிகைகள் காலாண்டுக்குரியதாகவும், மாதாந்தமாகவும் வெளிவருகின்றன. ஆகவே இந்தக் காலத் தேவைகளை அனுசரித்து இலக்கிய ஆக்கங்களை பெறுவதும் அவற்றை அச்சிட்டு வெளியிடுவதும் சிரமமான தொன்று. அதேவேளையில் அந்தப் பத்திரிகைகள் வாசகர்களின் கைகளில் குறித்த காலத்தில் கிடைக்கச் செய்வதும் அவர்களை தேடி வாங்குவதும், வாசிக்கத் தூண்டுவதுமாகிய பல தூண்டல்களை இந்த பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய பல்துறைசார் ஆற்றல் அனுபவம் உடையோரின் திறமைகளில் ஒன்றிணைந்த வெளியீடுகளே பத்திரிகைகளும், சஞ்சிகைகளுமாகும். விருப்புடன் இவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாசகர்களுக்கு இவற்றின் விநியோகம் காலந் தாழ்த்தாது கிடைக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொரு பத்திரிகை நிறுவனமும் சஞ்சிகை வெளியீட்டாளர்களும் தமது பணியை மேற்கொள்கிறார்கள்.

**பரணி :**

**வெளிவரவிருக்கும் உங்கள் படைப்புகள் பற்றிக் கூறுங்கள்?**

**நெடுந்தீவு மகேஷ் :**

கல்விசார் இலக்கிய ஆக்கங்களுடன் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த கடந்தகால "விளக்கு" சஞ்சிகைகளில் கல்வியியலாளர்கள் எழுதிய சிறப்பான கட்டுரை களின் தொகுப்பு "அணையா விளக்குகள்" என்ற பெயரில் வெளியிட முயற்சிகள் முன்னெடுக்கப்படு கின்றன. "உதயன்" வார இதழில் வெளிவந்த "சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி" என்ற பத்தி எழுத்துத் தொடரை தொகுத்து நூலாக வெளியிடுதல், சிறுவர் இலக்கியம் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்டு வெளிவந்த சிறுவர் கவிதைகளின் தொகுப்பான துள்ளும் உள்ளங்கள் கவிதைநூல் வெளியிடுதல். இவை தவிர இன்னமும் நூலுருப் பெறாதுள்ள சிறுகதைகளின் தொகுப்பு என்பவற்றை வெளியிட முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.

**பரணீ :**

**ஈழத்து இலக்கியம் பற்றி உங்கள் கருத்து?**

**நெடுந்தீவு மகேஷ் :**

தமிழ் நிலமான ஈழம் தமிழரின் பாரம்பரிய மண். அதன் மொழி, கலாசாரம் என்பன தமிழ் மொழியின் வழி தோன்றிய வாழ்முறையின் மூல வெளிப்பாடுகளே எனலாம். தமிழ் மொழி வழி தோன்றிய இலக்கியம் ஈழத்தின் தமிழர் பாரம்பரி யத்தைக் காட்டுவதுடன் சமகால மக்களின் வாழ்வி யல் பற்றியும் வெளிப்படுத்தியே வளர்ச்சி பெறுகிறது. ஈழத்தில் தமிழ்மொழி இலக்கியம் மொழிப்பயன் பாட்டுக்கேற்ப கட்டுரை, கவிதை, சிறுகதை, உரை நடை நாடகம் போன்ற இலக்கிய வடிவங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஈழம் தனது அரசியல்வழிப் பாதிப்புகளால் ஏற்பட்ட இழப்புகளைச் சீர் செய்து விடுதலை நோக்கிப் பயணிக்க முயற்சிக்கிறது. அதற்கேற்ப தமிழ் இலக்கிய ஆக்க முன்னெடுப்புகளில் பலர் முயன்றுழைக்கின்றனர்.

இன்றைய ஈழத் தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதில் அல்லது சீரிய பண்புகளுடன் முன் னெடுப்பதில் கரிசனை கொள்பவை சஞ்சிகை களும், பத்திரிகைகளுமே என்பதில் மாற்றுக் கருத்துகள் இருக்க இயலாது. இலக்கியப் படைப்பு களை நுகர்வதும் அவை சார்ந்து தெளிவு பெறுவதும் அல்லது செயலூக்கம் தரும் வகை சேர்ந்த உந்துதல்களை மேற்கொள்வதும் அவசியமாகும். காலத்தைக் காட்டும் கண்ணாடி யாகத் திகழ வேண்டியதான ஈழத்து இலக்கியம் ஈழ மக்களின் வாழ்முறையையும், அவர்தம் அகம், புறம் சார்ந்து செயற்படு நிலைமைகளையும் வெளிக் கொணர்தல் வேண்டும்.

போர்க்காலத்திற்கு முந்தியதும் பிந்தியது மான கால எல்லைக்குள் வெளிப்படுத்தப்பட்ட இலக்கியங்கள் பலவும் மொழிச்சிறப்பால் போற்றப்படும் நிலையிலேயே உள்ளன.

போரையும் அதன் தாக்கங்களையும் வெளிப் படுத்தும் இலக்கியங்களுள் போரைத் தொடங்க ஊக்குவித்த காரணிகளை வெற்றி கொள்ள ஏற்ற இலக்கியங்களே நம்முன் எழுவது அவசியம் என்பதையே எமது அரசியல், வாழ்வியல் ஒழுங்குகள் எமக்கு அச்சுறுத்தி நிற்கின்றன.

தமிழர்தம் அரசியற் தீர்வை நோக்கிய நகர்வுகளில் ஈழத்து இலக்கியம் முக்கிய பங்காற்றி வந்துள்ளது. போர்க்காலத்தில் ஈழமக்களின் வெற்றிக்கான முழக்கம் மிகுந்தொலித்தன. போருக்கு முன்னான காலமெல்லாம் தமிழர் விடுதலைக்கான குரலாக ஒலித்த இலக்கியம் போரில் உள்ளீர்க்கப்பட்டபோது அதன் வெற்றிக் காக குரல் கொடுத்தது. தற்பொழுதும் போருக்கு முந்திய கால நிலைக்குத் திரும்பியிருப்பதாகவே உணர முடிகிறது.

அரசியல் தவிர்த்து காதல், இல்லறம், வாழ்வு குறித்து ஈழத்தின் இலக்கியம் இன்று அதிகம் பேசுகிறது. இவை தவிர வாழ்வில் எதிர்பார்ப்பில்லாத வகையில் உள்நுழைந்துள்ள போதைப் பொருள், வாள்வெட்டு என்பவற்றை ஒழிக்கும் வகைசார்ந்த இலக்கியங்களின் தோற்றங்கள் வரவேற்கப்படு கின்றன.

ஈழப்பரப்பில் எமது கவனத்தை ஈர்க்கும் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் வரிசையில் பலரும் நம் கண்முன்னே தோன்றவே செய்கின்றனர். மகாகவி, தான்தோன்றிக் கவிராயர் போன்றோர் பலர் கவிதையிலும், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், வ.அ. இராசரத்தினம் போன்ற பலர் சிறுகதைத் துறையிலும் முன்னணியில் அன்று பேசப்பட்டனர். போரின் தாக்கத்தையும், அதன் வெற்றிக்கு உழைக்கும் வலிமையையும் எழுதிய புதுவை இரத்தினதுரை, காசி ஆனந்தன் போன்றோருக்கும் மேலாக வ.ஐ.ச.ஜெயபாலன், கருணாகரன் போன்றோரின் கவிதை இலக்கியமும், பெண்ணியம் சார்ந்த இலக்கியப் படைப்பாளிகளான கோகிலா மகேந்திரன், இராஜேஸ்வரி, தாட்சாயணி, தாமரைச்செல்வி போன்றோர் பலரும் எமது நினைவுக்கு வருகின்றார்கள். வாசிப்பு அருகிச் சென்றுள்ள இன்றைய நாட்களில் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு மந்த நிலை காணப்படுவது என்னவோ உண்மைதான்.

வாசிப்பை நேசிப்பதும், வளரும் ஈழத்து இலக்கிய உலகை வாழ்விப்பதும் ஈழத் தமிழ் மக்களின் அயராத பணியாதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் உயிரின் ஓலம்

அன்று அவசர சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அந்த இளைஞன் மயங்கிக் கிடந்தான். இரத்தம் அதிகமாக வெளியேறி விட்டது. குண்டுபாய்ந்த இடத்திலிருந்து இரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. குற்றுயிராய்க் கிடக்கிறான் என்ற செய்தியே வெளியிற் பரவித் திரிந்தது. வைத்தியர்கள் அவனது உயிர் பிழைக்க எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் சுறுசுறுப் படைந்தன.

இரத்தம் ஏற்றப்பட்டது. உடலிற் தங்கி விட்ட குண்டுத்துகள்கள் அகற்றப்பட்டன. காயங்கள் தையலிடப்பட்டு மருந்திடப்பட்டன. அந்தச் அறையில் அவசரம் அவசியம் உணரப்பட்ட வைத்தியர்களின் துரிதமான சாதுரியமான வைத்திய உதவிகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. வைத்தியருக்கு உதவியாகத் தாதிமார் ஓடி ஓடித் தமது சேவையில் கடமையில் உற்சாகமாக ஈடுபட்டனர்.

ஓர் உயிர், அதன் நிலைப்பு, அதன் வாழ்வு உணரப்பட்ட நிலையில் தம்மை முழுமையாய் அர்ப்பணித்துச் செயற்படும் வைத்தியர்கள்! தாதிமார்கள்!

சிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியது. தனியான ஓர் இடத்தில் மிகவும் கரிசனையுடன் கவனிக்கப்பட வேண்டியவன் அவன்.

ஏற்பட்ட காயங்கள் குணமாகும் வரை ஏற்ற மருந்துகள், வைத்திய கவனிப்புகள் கிரமமாகக் கொடுக்கப்பட வேண்டும். அனைத்தும் ஏற்பாடாகியது கட்டிலிற் கண்திறக்காமற் தொய்ந்து கிடந்தான் அவன். மேலும் மேலும் மருந்துகள், உணவுகள் என்று எல்லாமே ஆட்டப்பொம்மைக்குக் கட்டப் பட்ட நூல்கள் போல ரியூப்களில் வடியச் சூழத் தொங்க விடப்பட்டிருந்தன. உயிருடன் இருக் கின்றான் என்பதை உணர்த்த துருத்தி போல் மார்பசைந்து துடிப்பது தெரிந்தது. அவனது



தாயைத் தவிர வேறொருவரும் அவனருகில் இல்லை.

"ஐயோ! யாரோ என்ர பிள்ளையைச் சுட்டுப் போட்டுப் போயிட்டாங்கள்" ஆற்றாமையும் ஆத்திரமும் தொனிக்க தாய் முணு முணுத்தாள்.

தாய்மைத்துடிப்பும், வேதனையும் அவளை ஏதேதோ சொல்லி அழ வைத்தது. உயிர் தப்பி விடுவானா? மீண்டும் நடமாடுவானா? வைத்தியர் கள் செய்யும் சேவையால் தன் மகன் எழுந்து விடுவானா? இறந்து விடுவானா? என்றெல்லாம் பலவாறாக எண்ணினாள், பிரதான வீதியில் ஓடும் வானங்களாக அவள் சிந்தனையில் நல்லதும் கெட்டதும் நெருங்கியும் விலகியும் சென்றன.

"அம்மா இவன் உன் மகனா?" வைத்தியரின் குரல் கேட்டது. அவர் வந்துவிட்டார். நோயாளி யைப் பார்வையிட்டார். அங்கே தொங்க விடப் பட்டிருந்த குறிப்புத்தாளில் ஏதோ எழுதினார்.

"ஓம் ஐயா.. பிள்ளைக்கு உயிருக்கு ஒண்ணும் ஏற்படாதே?" தாயின் உள்ளம் தவித்தது. பதை பதைத்தது. வைத்தியர் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"உயிரைக் காப்பாத்தத்தானே நாங்கள்

படிச்சிட்டு வந்தனாங்கள். பயப்படத்தேவையில்லை. மகனுக்கு ஒண்ணுமில்லை அவன சுகமாகி விடுவான்" வைத்தியர் பெற்ற தாயின் வயிற்றில் பால் வார்த்தார்.

"அப்பனே ஆண்டவா!"

இறைவனை வேண்டிக்கொண்டாள். மகனின் ஆஸ்பத்திரி நாட்கள்! வைத்தியர்களின் அன்பும் உதவியும் தொடர்ந்தன. தாதியர்களின் சேவையும் கவனிப்பும், கணிப்பும் அவன் வேதனைகளைத் தீர்த்தன. அவனது பெரிய காயங்கள் ஆறிவிட்டன. விரைவிலேயே குணமடைந்தான்.

வைத்தியரின் வதனத்தில் என்றும் போல் மலர்ச்சி தன் சேவைக்கு எடுத்துக்காட்டாக ஓர் உயிர் நிலைத்து நீண்டு வாழப் போகிறது. குதூகலத்தோடு அவனைப் பார்த்தார்.

"இன்றைக்குத் துண்டு வெட்டிக்கொண்டு வீட்டுக்குப்போகலாம்" வைத்தியரின் வார்த்தைகள் அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆஸ்பத்திரியில் நீண்ட நாள்கள் அடைபட்டுக்கிடந்தவனுக்கு விடுதலை! வீட்டில் தனது உற்றார் உறவினருடன் மீண்டும் உறவாடும் ஆவல்.

அவன் புன்னகைத்தான் தாய் மகிழ்ந்தாள் வீட்டுக்கு கூட்டிச்செல்லும் ஒழுங்குகள் ஆரவாரங்கள் மலர்ந்த முகத்துடன் அவள் எல்லோரையும் பார்த்தாள். "ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மகனைக் கிளினிக்குக்குக் கூட்டிவரவேணும்" வைத்தியரின் வேண்டுகோள்.

"ஓம் ஐயா கூட்டிவாறன்" மகிழ்ந்தாள் தாய். தனது மகனை உயிர்த்தெழவைத்த வைத்தியரைக் கூப்பிய கைகளுடன் உளமுருக நோக்கினாள். அவர் தமது சேவையே நோக்காகும். சிந்தனையுடன் அடுத்த கட்டிலில் காயமுற்றிருந்த நோயாளியை நோக்கி நடந்தார். இளைஞன் வீட்டுக்கு வந்த ஓரிரு தினங்களில் எஞ்சியிருந்த காயங்களும் ஆறி விட்டன. உடற்சோர்வு. பலவீனம், களைப்பு என்பவற்றைப் போக்க வீட்டார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல.

இறைச்சி, பால், முட்டை என்று சத்துணவுகள் வாங்கிக் கொடுத்தனர். நெஸ்ரோமோல்ட், கோர்லிக்ஸ், சஸ்ரஜின் என்றும் பல்வேறு உணவுப்பொருட்களும் வீட்டிலே வந்து குவித்தன.

அவன் இப்பொழுது மனிதனாக மீண்டும் நடந்தான். உற்சாகமாக உலவினான். தாய் உள்ளம் பூரித்தாள்.

ஓர் உயிரின் மகத்துவமான நிலைப்புக்காக ஒரு ஜீவனின் வாழ்வுக்காக எத்தனையெத்தனை செயற்பாடுகள், வாழ்தல் என்பதும், உயிர் நிலைத் திருத்தல் என்பதும் இலகுவில் நிகழக்கூடியவையல்ல.

வெள்ளிக்கிழமை கிளினிக் நாள்!

வைத்தியசாலையின் முன் விறாந்தையில் சனக்கூட்டம் திரண்டிருந்தது அங்கே போடப்பட்ட வாங்குகளில் பலர் அமர்ந்திருந்தனர். மகனைக் கரிசனையுடன் கிளினிக்கில் காண்பிக்கக் கூட்டி வந்திருந்தாள் அந்தத் தாய். வைத்தியர் இன்னமும் வரவில்லை. சில நிமிட நேரங்களில் அவர் வந்து விடக்கூடும்.

திடீரெனக் கேட்ட வேட்டுச்சத்தங்கள் அந்த ஆஸ்பத்திரியைத் திடுக்கிட வைத்தது. நாலா திசையும் கலைந்தோடும் மக்கள் வெள்ளம்! எங்கே? என்ன நடந்து விட்டது? என்பதை அறிய முடியாத படி அல்லோல கல்லோலப்பட்டது. தலையில் குண்டுகள் பாய்ந்த நிலையில் அந்த இளைஞன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான். தாய் கதறி அழுதாள்.

"தம்பி தம்பி" அரற்றினாள். அவனிடமிருந்து எந்தவிதமான பதிலுமில்லை. யார் செய்தார்கள்? ஏன் செய்தார்கள்? எதுவுமே தெரியவில்லை. அவனது உயிர் பிரிந்துவிட்டது. இரத்தம் தோய்ந்த மகனின் தலையை அந்தத் தாய் அணைத்துக் கொண்டு அலறினாள். ஆறுதல் சொல்ல எவருக்குமே ஆற்றல் இருக்கவில்லை. வைத்தியர் அந்த இடத்தை நோக்கி மெல்ல நடந்து வந்தார். அவர் கண்ட காட்சி உள்ளத்தை உருக்கியது. இதயத்தில் பாறாங்கற்களைப் போட்டு இறுக்கியதைப் போன்ற உணர்வு எதனையும் அவரால் பேச முடியவில்லை.

"ஐயா என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ! என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ!"

அந்தத்தாய் வைத்தியரின் காலில் விழுந்து கதறினாள்.

"உயிரைக் காப்பாற்றத்தான் படிச்சனெண்டு சொன்னீங்களே ஐயா! என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ! காப்பாத்துங்கோ!"

அவள் ஓய்வின்றி ஓலமிட்டாள். மகனின் சடலத்தின் மீது விழுந்து புரண்டாள். வேதனை அவ்விடத்தில் எஞ்சிநின்றிருந்த அனைவரையும் ஆட்கொண்டது. வைத்தியரின் கண்கள் குளமாயின.

"நான் உயிரைக் காப்பாற்றப் படித்து வந்தேன். ஆனால் உயிரை இரக்கமின்றிப் பறிப்பதற்கென்றே படித்தவர்கள் இருக்கையில் என்னால் என்ன செய்ய முடியுமம்மா" வேதனையோடு கூறிக் கொண்டே டாக்டர் அவ்விடத்திலிருந்து நடந்து கொண்டிருக்கிறார்.

– நன்றி :செங்கதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம் கொடிது செயல் வலிது

நின்று களத்தினில் நேரெதிர் யானையை
வென்று மடிந்தனன் தந்தையவன்
நன்றவள் நாயகன் ஆநிரை காத்த மன்
சென்று பகையழித்தே இறந்தான்

இன்று ஒலித்தது மீளவும் போர்ப்பறை
நின்றது இல்லையப் போர்க் கொடுமை
என்று துணிந்தவள் தன்சிறு மைந்தனை
அன்று களத்திற் கனுப்பநின்றாள்.

எண்ணெய் தடவித் தலைசீவி எழில்
வெண்ணுடை போட்டுக்கை வேல்கொடுத்து
நண்ணுக போர்க்களம் என்று விட்டாளவள்
எண்ணம் கொடிது செயல் வலிது.

ஒரே மைந்தனை உறுத்தும் பகை வெல்ல
போரேக வென்றே விடுத்த பெண்மை
யாரே துணிந்திடல் கூடும் மறக்குடி
ஊரே நடுங்கும் அவள் செயலால்.

## உயிர்த்தெழுவர்

இன்றைக்கோ
நிச்சயமற்று இருக்கிற
ஊனுடம்பு

நாளைக்கும்
வாழ்வதற்காய்
நலந்தேடும் அர்ச்சனைகள்

என்றைக்கும் நிலைக்காத
எண்சாண்
உடல் சுமப்போர்

கொன்றவர்கள் - கொலைகாரர்
கூட்டுவரோ
வாழ் நாள்கள்

பொய்யிவற்றை மெய்யென்று
புகழ் தேடிக் கல்லறைகள்
புவி நிறையக் கட்டுவதோ காலம்.

என்றிவர்கள்
மெய்யுயிர்ப்பர்
நன்றறிவர் சென்றவர்கள்
நமக்கும் அது வழியே
என்றறிவர். மெய்யுணர்வர்.
அன்றே விழி பெறுவர்
அவரோ உயிர்த்தெழுவர்.



## பாதைகள் மாறி

பாதைகள் மாறி
இருண்டன
வௌவால்களாகி
வளி கிழித்து
திசை தேடி
வசந்தம் நாடி
நகரும் காலங்கள்

உலகமோ
விரிந்து பெரிதாக
எங்கள் ஊர்களோ
சிறிதாய்
மிகவும் சிறிதாய்
எல்லைக் காவல்களால்
இறுகும்

மூச்செடுக்க
அனுமதி அட்டைகளுக்காய்
நீளும் வரிசைகள்
நிரல்களாய்
நிரைகளாய்
நிம்மதியைக் குலைத்தபடி
பாதைகள் மாறி
இருண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலியூர் வேல்நந்தகுமார்

# என்றும் தொலையாதன் வாழ்வின் வாழ்விடத்தின் பழகிய மனிதர்களின் நினைவுகளைப் பேசும் நெடுந்தீவு மகேசின் “தொலையா நினைவுகள்” குறித்த ஒரு பார்வை




பொதுவாக எம் வாழ்வில் நாம் கடந்து வந்த பாதைகளின் நினைவுகள் என்பவை என்றும் மறக்க முடியாதவை, பசுவையானவை ஆழப்பதிந்தவை. ஒரு படைப்பாளி இவற்றையும் ஏதோ ஒரு வகையில் தன் படைப்புக்குள் கொண்டுவரவே முயல்கிறான். அவை படைப்பிலக்கியங்களாக பத்தி எழுத்துக் களாக, அனுபவப் பதிவுகளாக பல வடிவங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஈழத்தில் இத்தகைய நினைவுகளை எழுதிய பல படைப்பாளிகள் உளர். அவ்வகையில் தன்னுடைய தொலையா நினைவுகள் என்ற கட்டுரைசார் பத்தியெழுத்து நூலினூடாக நெடுந்தீவு மகேஷ் அவர்களும் இதில் இணைந்து கொள்கிறார்.

ஈழத்தின் படைப்பிலக்கியத்துறையில் நீண்டகாலமாக இயங்கிக் கொண்டிருப்பவர்களில் நெடுந்தீவு மகேசும் ஒருவர். நெடுந்தீவு என்ற தன் ஊர்பெயரை தன் பெயரோடு இணைத்து அடையாக ஆக்கிக் கொண்டவர். அவரை நினைத்தால் அவரது நெடிய உருவமும் கூடவே எம் நினைவில் வரும். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்த படைப்பாளிகளில் அவரும் ஒருவர். குறிப்பாக தன்னுடைய நீண்டகால ஆசிரிய வாழ்வு அனுபவத்தின் வழி பல கல்வியியல் சார் அனுபவப் படைப்புக்களை தந்த சிறப்பும் இவருக்குண்டு. உதயன் உட்பட பல பத்திரிகை வழியாகவும் அவ்வப்போது அவரது எழுத்துக்களை நாம் தரிசித்திருக்கிறோம். பழகுவதற்கு மிக இனிமை யானவர். அவரது படைப்பிலக்கியப் பணிகளை சிறப்பிக்கும் வகையில் ஜீவநதி வெளியிடும் இச் சிறப்பிதழில் அவரது தொலையா நினைவுகள் குறித்து எழுதக் கிடைத்த வாய்ப்புக்கு பரணிக்கும் படைப்பாளிக்கும் நன்றி.

தொலையா நினைவுகள் என்ற நெடுந்தீவு மகேசின் இந்நூல் 2022 ஆம் ஆண்டு வெளி வந்துள்ளது. இந்நூலை அவர் நெடுந்தீவு கனடா மக்கள் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் பசுவூர் பரா என அறியப்படும் ப.சின்னத்துரைக்கு காணிக்கை ஆக்கியுள்ளதுடன் அவர் குறித்த சில நினைவுகளையும் பகிர்ந்துள்ளார். அதனைத் தொடர்ந்து தொலையா நினைவுகளுடன் நான் என்ற மகுடத்தில் நினைவுகளின் சுமைகள் பற்றியும் அவற்றை இறக்கி வைத்து ஆறுதல் பெறுதல் பற்றியும் கூறி சுடரொளியில் தான் தொடர்ச்சியாக எழுதிய எழுத்துக்களில் இருந்து தேர்ந்தெடுத்த வற்றின் தொகுப்பு இது என்பது பற்றியும் உதவி யோருக்கான நன்றினையும் பகிர்ந்துள்ளார். இதே போல தன் மனைவி வழி நெடுந்தீவு மகேசின் உறவினராக விளங்கும் பேராசிரியர் சி.சிவலிங்க ராசா அவர்கள் எனது பதிவு என்ற தலைப்பில் இந்நூல் குறித்த தனது மனப் பதிவுகளை வெளிப் படுத்தியுள்ளார். நான் கண்டது நான் கேட்டது எனத்தொடங்கும் புதுமைப் பித்தனின் தொடரை நினைவுபடுத்துவதாக இந்நூல் இருக்கிறது என்றும் நல்ல பல செய்திகளை வாசகன் ரசிக்கக் கூடிய வகையில் எளிய நடையில் கூறியுள்ளமை சிறப்பு எனவும் கூறியுள்ளார்.

இனி நூலின் உள்ளடகத்தினுள் நுழைந் தால் பல்வேறு தலைப்புக்களில் அமைந்த 51 ஆக்கங்கள் இதில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் பல அவரது சொந்த வாழ்வோடும், பழகிய மனிதர் களோடும், ஊர் நினைவுகளோடும் தொடர்பு பட்டவை. ஒவ்வொரு தலைப்புக்களும் கூட வித்தியாசமான வகையில் அமைந்துள்ளன. “அன்னைக்கு நீயே உலகம்” என்ற தலைப்போடு முதலாவது கட்டுரை தொடங்குகிறது. இதில் அவர் தன்னை கஷ்டப்பட்டு வளர்த்த தனது தாயார் குறித்த நினைவுகளை பகிர்ந்துள்ளார். தன் உணவை செய்தமை, படிக்க வேணும் தொழில் செய்ய வேணும் என அவள் கண்ட கனவுகள் வெங்காயக் கூடை பின்னி அதில் வரும் வருமானத்தில் தன்னை வளர்த்து ஆளாக்கியதன் அன்னை பற்றிய நினைவுகளின் சமர்ப்பணமாய் இக் கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைவதுடன் உணர்வார்ந்த எளிமை மிக்க எடுத்துரைப்பும் மொழியும் எம்மை கவர்கின்றன. மட்டுமன்றி இதன் வழி வாசகரும் தம்முடைய அன்னையை நினைத்துப் பார்க்கச் செய்தமையும் சிறப்பு.

வழக்கும் கணக்கும் என்ற ஆக்கம் காணி வழக்கு ஒன்றுக்காய் நீதிமன்றம் சென்ற அனுபவத்தையும் தீர்க்கப்படாத அந்த பிரச்சினையை முன்கூட்டியே பேசித் தீர்த்திருந்தால் கிடைத்திருக்க கூடிய நன்மைகளையும் பேசுகிறது. எம்மையும் சிந்திக்க வைக்கிறது. தனிமை கலையும் போது என்ற ஆக்கம் மனைவியை இழந்து மகனாலும் கைவிடப்பட்டு தனிமையில் வாழ்ந்த முருகையா என்ற பாத்திரத்தின் வாழ்வியலை பேசி நெஞ்சை நெகிழ வைக்கிறது.

பாரம்பரிய அடையாளங்கள் என்ற கட்டுரை பழைமைகள் எப்படி புதுமை என்ற பேரில் மாற்றப்புடுகின்றன என்பதையும் எமது தொன்மை இருப்பின் அடையாளத்தையும் பேசுகின்றது. உதவும் கரங்கள் என்ற கட்டுரை பிறருக்கு உதவுதல் என்ற பேரில் பணத்தை சேகரித்து மோசடி செய்யும் நபர்கள் பற்றிப் பேசுகிறது. மனிதரே உயிரினத்தின் உன்னதர் என்ற படைப்பு ஒரு புனைகதை தன்மையோடு அமைந்துள்ளது. கொல்லப்பட்ட ஒரு இளைஞனின் மூடப்பட்ட சவப்பெட்டியும் அதில் இலையான் மொய்க்காமல் தடுக்கும் தாயின் செயலையும் மையப்படுத்தி பல செய்திகள் இந்த சமூகத்துக் சொல்லப்படுகின்றன.

வாழ்வுக்கு வழிகாட்டும் வாசிப்பு என்ற ஆக்கத்தில் இன்றைய வாசிப்புச் சூழலின் வரட்சி நிலையும் அந்தக்கால பாடசாலைகளில், கடைகளில் காணப்பட்ட வாசிப்புச் சூழலும் எடுத்துக் காட்டப்படுகிறது. தவறுகளுக்காக வருந்துவோம் என்றகட்டுரை ஒரு வீட்டில் திட்டமிடப்படாது நடப்பட்ட தென்னைமரம் அடுத்த வீட்டாருக்கு ஏற்படுத்தும் தாக்கங்களின் பின்னணியில் தவறுகள் நிகழாமல் திட்டமிட்டு வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. அதிபர் அற்ற பாடசாலைகள், ஆசிரியராகுவோம் போன்ற ஆக்கங்கள் இவரது கல்வித்துறை அனுபவங்கள் ஊடாக எழுதப்பட்டுள்ளன.

அம்மாசாகமாட்டாள் என்ற ஆக்கம் சோதி லட்சுமி என்ற தாயின் மகளைக் காணாத ஏக்கத்தை மையப்படுத்தியதாய் அமைந்து நெஞ்சைப் பிழிகிறது. மனங்களை திறவுங்கள் என்ற கட்டுரையில் புகையிரத நிலையம் தந்தையின் செயல் என்பன தொடர்புபடுத்தப்பட்டு எமக்கான அறிவுரை கூறப்படுகிறது.

நோக்கம் தவறிய பயணம் என்பதும் புகையிரதத்தை மையப்படுத்தி எமது வாழ்க்கைப்



பயணத்தை விமர்சிக்கிறது. மீண்டும் மீண்டும் என்பது மீளவும் மீளவும் ஒரே இடத்தில் மரம் நடும் நிலையை எடுத்துக் காட்டி சமூக விமர்சனமாய் அமைகிறது. தாழ்வினால் உயரும் தலைவன், மரணத்தை அல்ல மகிழ்வைத்தேடி, ஏன் வாழ்கிறேன் போன்ற ஆக்கங்களும் எமக்கு பல அறிவுரைகளைக் கூறி எம்மை சிந்திக்க வைக்கின்றன. "மனிதர்களைத்தேடி", "கடவுள் எங்கே இருக்கிறார்", கௌதம புத்தரும் சிந்தனைத் தெளிவும் போன்ற ஆக்கங்கள் வழி ஆசிரியரது ஆன்மீக சிந்தனைத் தெளிவை உணர்ந்து கொள்ள முடிகிறது. ஐந்தறிவும் ஆறறிவும் என்ற ஆக்கம் வழி அதிகரித்து மோட்டார் வாகனப் பாவனை வீதி விபத்துக்கள் சார்ந்த விடயங்கள் பேசப்படுகின்றன. கனவுகள் நனவுகளின் மறுபிறப்பாகும் என்ற ஆக்கம் வித்தியாசமான முறையில் ஒருகனவுக்கதையோடு தொடங்கி நகர்கிறது. புகழ்பெற்ற காதற்கதை, பாத்திரமறிந்து பார்வையிடு, ஆசிரியரும் மாணவரும் இயந்திரங்கள் "அல்லர்" சிறுபிள்ளைத்தனம், கல்வியின்நோக்கம், சாதிச்சுவர்களைத் தகர்ப்போம் கேமாவும் வில்லும், மனிதர்களாவோம் தொழிற்பக்தி என அமையும் அனைத்து ஆக்கங்களும் தத்தம் நிலையில் சிறப்புடையனவாகவே விளங்குகின்றன. புத்தகத்தின் இறுதி அட்டையில் நூலாசிரியராகிய நெடுந்தீவு மகேஷ் குறித்த அறிமுகக் குறிப்பு ஒன்றை கலாசார உத்தியோகத்தர் திருமதி விஜிதா செல்வகுமார் அவர்கள் வழங்கியுள்ளார். முன் அட்டையை ஆசிரியருடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட ஆளுமையாளர்களின் படங்கள் அலங்கரிக்கின்றன. புனைவும், புனைசாராத் தன்மையும் சமூக அறநெறியும், இடையிடையே நகைச் சுவையும் கலந்து படைக்கப்பட்டுள்ள இந்நூல் வாசிக்க மிக எளிமையாய் அமைவதுடன் வாசிக்கத் தூண்டும் படைப்பாகவும் அமைந்து சிறப்புப் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரணி ஓர் ஆச்சரியக்குறி சிறுகதைத் தொகுப்பு ஓர் அறிமுகக்குறிப்பு

**சுந்தரம் டிவகலாலா**



ஒரு பாடசாலையின் சிறப்பான வளங்களில் முதன்மையானவர்கள் ஆசிரியர்களே. அவர்களின் திட்டமிடலும் அறிவும், விவேகமும், உறுதியும் கலந்த கற்பித்தல் உத்திகள் மாணவர்களின் தேர்ச்சியை உயர்த்தும் வலிமை கொண்டவையாகும்.

அந்த வகையில் ஆசிரியர்களின் வாண்மையை விருத்தி செய்தல் அவசியமாகிறது. ஆசிரியர்கள் கற்கிறார்கள். கற்பிக்கிறார்கள் என்ற நோக்கில் மாணவர்களிடமிருந்தும், மாணவர்களின் விவேகம் கலந்த வினாக்களின் மூலமும், கற்கத் தூண்டப்படுகிறார்கள் என்ற யதார்த்தத்தை தாரணி ஓர் ஆச்சரிய என்ற சிறுகதை உணர்த்தி நிற்கிறது.

அதேபோல் இத்தொகுப்பில் உள்ள கதைகள் யாவுமே எளிமையும், வாசிக்கத் தூண்டும் இனிமையும் கலந்த மொழி நடையில் இலகு தமிழில் ஆக்கப்பட்டுள்ளன. இச் சிறுகதைத் தொகுப்பினைக் கல்வியுலகம் அவசியம் வாசிக்க வேண்டும். இது வாசிப்பதற்கான ஒரு நூல் மாத்திரமல்ல, ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்படத் தூண்டும் வலிமை மிகு சிறுகதைத் தொகுப்புமாகும்.

வாசித்தல் கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் உறுதுணையானது என்பதை உணர்வோம், வாசித்து முன்னேறுவோம்.

வடக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி இளைப்பாறியுள்ள செ.மகேஷ் அவர்களின் இத் தொகுப்பிலுள்ள சிறுகதைகள் யாவுமே ஆசிரியர்களை நோக்கியதாக அவர்தம் வாண்மை விருத்திக்கு உதவும் வகை தேர்ந்து எழுதப்பட்டவையாகும். ஆசிரியராகவும், ஆசிரிய ஆலோசகராகவும். பணிப்பாளராகவும் மாத்திரமல்லாது பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றிலும் தனது எழுத்தாக்கங்களால் தனது திறமையை வெளிப்படுத்தி வருபவர் சிறந்த கவிஞர். இச் சிறுகதைத் தொகுப்பு நூல் கல்வியுலகத்திற்கு வழிகாட்டும். வல்லதோர் இலக்கியப் படைப்பாகும். செ.மகேஷ் அவர்களின் இச்சிறுகதைத் தொகுப்பை ஆசிரியர்கள் வாசித்துத் தம் திறனுணர்ந்து செயலாற்றுவார்கள் என நம்புகிறேன்.

# நெடுந்தீவு மகேஷ் சிறு தகவல்கள்

முழுப்பெயர் - செல்லத்தம்பி மகேசு

முகவரி - 11ஆம் வட்டாரம்
நெடுந்தீவு கிழக்கு
உதவிக் கல்விப் பணிப்பாளர்
(ஓய்வு நிலை)
வடக்கு கிழக்கு மாகாணக கல்வித் திணைக்களம்
திருகோணமலை

கவிஞர், எழுத்தாளர்
பத்திரிகை ஆசிரியர்

ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுழைப்பகத்தின்
நிபுணத்துவ ஆலோசகர்

ஆறுதல் நிறுவனத்தின்
ஆரம்பக்கல்விச் செயற்றிட்ட ஆலோசகர்

எழுத்தாக்கங்கள்
மனிதத்தைத் தேடி - கவிதை
மாகாண இலக்கிய விருது பெற்றது 2003

"தாரணி ஓர் ஆச்சரியக்குறி" -சிறுகதை

"வாழ்வதற்குப் போராடு" -சிறுகதை

"நான் பிறவாதிருந்திருந்தால்" -சிறுகதை

"தொலையா நினைவுகள்"
சுடர் ஒளி வார இதழ்களில் வெளிவந்த பத்தி எழுத்துகளின் தொகுப்பு

"கலையாகும் கடதாசி"
சிறுவர்களுக்கான ஆக்கச் செயல் நூல்

பெற்ற விருதுகள்
முதலமைச்சர் விருது
கலாபூஷணம் விருது
யாழ் முத்து விருது
தினபதி ஞானம் பத்திரிகைகள் வழாங்கிய சிறுகதை
கவிதைகளுக்கான பரிசுகள்

சஞ்சிகைகளின் ஆசிரியராக
அர்ச்சுனா,
ஆறுதல்
விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org